# உதயன்

Uthayan - A lively National Tamil Daily

சுடர்: 30 கதிர்: 011 வள்ளுவர் ஆண்டு: 2045 கார்த்திகை 21, ஞாயிற்றுக்கிழமை 07.12.2014


07 DEC 2014

காலநிலை
மேக மூட்டமான காலநிலை காணப்படும். காற்று மணிக்கு 70 கி.மீ. வேகத்தில் வீசும்.

**பழி தீர்த்த நியூசிலாந்து தொடர் சமநிலையில்**



பக்கம் 27

# மைத்திரிக்கே முழு ஆதரவு

## ஐ.தே.கவின் விசேட வருடாந்த மாநாட்டில் ஏகமனதாகத் தீர்மானம்



கொழும்பு, டிசெம்பர் 7
ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் பெருந்திரளான ஆதரவாளர்கள் பங்கேற்புடன் நேற்று நடைபெற்ற கட்சியின் விசேட வருடாந்த மாநாட்டில் ஜனவரி 8ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் எதிரணி யின் பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு முழு மையான ஆதரவளிப்பதற்கு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
பொதுவேட்பாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவைப் பெற்றுக் கொடுக்கும் நோக்குடன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த விசேட வருடாந்த மாநாட்டில் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ உட்பட சிரேஷ்ட தலைவர்கள், உறுப்பினர்கள் மற்றும் பெருந்திரளான ஆதரவாளர்கள் பங்கேற்றிருந்தனர்.
மைத்திரிபால சிறிசேனவை ஆதரிப்பது மற்றும் தேர்தல் பரப்புரைக் கால கட்டத்தில் கட்சியால் பிரதானமாகக் கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பான யோசனைகளை கட்சியின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரான ஜோசப் மைக்கல் பெரேரா

பக்.25

## ஆளும் கட்சி இந்த முறை 3 தடவைகள் கதவு தட்டும்

யாழ்ப்பாணம், டிசெ. 7
தேர்தல் காலம் என்றாலே வீடு தேடி அரசியல்வாதிகள் வருவது வழக்கம். இந்த முறை ஜனாதிபதித் தேர்தலில், ஒவ்வொரு வீட்டுக்கும் மூன்று தடவைகள் சென்று ஆதரவு தேடவுள்ளதாக ஆளுங் கட்சி தெரிவித்துள்ளது.
'ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்காக ஒவ்வொரு வீட்டுக்கும் மூன்று தடவைகள் சென்று தேர்தல் பரப்புரை செய்யப்படவுள்ளது' என்று அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.
வழமையாகக் கட்சிகள் வீடு வீடாகச் சென்று தேர்தல் பரப்புரையில் ஈடுபடும். எனினும், ஜனாதிபதித் தேர்தலுக்காக நாட்டின் சகல வீடுகளுக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிப் பிரதிநிதிகள் மூன்று தடவைகள் சென்று வாக்குச் சேகரிக்கவுள்ளனர்.
மாவட்ட மட்டத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பரப்புரைக் கூட்டங்களில் பங்கேற்க உள்ளார். இதற்கு மேலதிகமாகப் பிராந்திய வாரியாகவும், தேர்தல் தொகுதி வாரியாகவும், வாக்குச் சாவடி

பக்.25

## காஸ் விலையும் குறைப்பு

யாழ்ப்பாணம், டிசெ.7
நேற்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் 12.5 கிலோகிராம் நிறையுடைய சமையல் எரிவாயுவின் விலை 250 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணாண்டோ தெரிவித்துள்ளார்.
கடந்த இரண்டு மாதங்களினுள் இரண்டாவது தடவையாகச் சமையல் எரிவாயுவின் விலை குறைக்கப்பட்டுள்ளது. சீன ஜனாதிபதி இலங்கைக்கு வருகை தந்தவேளை, சமையல் எரிவாயுவின் விலை 250 ரூபாவினால் குறைக்கப்பட்டது.

பக்.25

## இலங்கைத் தளபதிக்கு எதிராக வழக்கு



யாழ்ப்பாணம், டிசெ. 7
மனிதகுலத்துக்கு எதிரான போர்க் குற்றங்கள் புரிந்த முன்னாள் இராணுவத் தளபதிக்கு எதிராகத் தென்னாபிரிக்காவில், தமிழ்க் கூட்டமைப்பினால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
தென்னாபிரிக்காவில் இடம்பெறும் மாநாட்டில் பங்கேற்கச் சென்றுள்ள முன்னாள் இராணுவத் தளபதியான ஜெனரல் சிறிலால் வீர சூரியவுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளமையினால், அவர் கைது செய்யப்படலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.
கிறிஸ்தவ இராணுவ உதவு தொகை அமைப்பின் சர்வதேச மாநாடு, தென்னாபிரிக்காவின் சைமன்ரவுன் கடற்படைத் தளத்தில் இடம்பெற்று

பக்.25

## மின்சாரக் கதிரையில் என்னை ஏற்றச் சதி

**ஜனாதிபதி மஹிந்த கூறுகிறார்**



யாழ்ப்பாணம், டிசெ. 7
என்னை ஜனாதிபதி பதவியிலிருந்து தோற்கடித்து மின்சாரக் கதிரையில் ஏற்றுவதற்கே இங்கு சூழ்ச்சிகள் இடம்பெறுவதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷ தெரிவித் துள்ளார்.
இந்தச் சூழ்ச்சிகளில் எதிர்க் கட்சியினரும், ஆளுங்கட்சியிலிருந்து

பக்.25

## பொலிஸாருக்கும் மோ. சைக்கிள்



யாழ்ப்பாணம், டிசெ. 7
பொதுமக்களுக்கான பணிகளை இலகுவாகச் செய்வதற்காக வடக்கு மாகாணம் உட்பட நாடளாவிய ரீதியில் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் மோட்டார் சைக்கிள்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.
அரச உத்தியோகத்தர்களுக்கு மோட்டார் சைக்கிள்கள் அண்மையில் வழங்கப்பட்டது போன்று பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் அவை நேற்று வழங்கப்பட்டன. 50 ஆயிரம் ரூபாவுக்கு அவை விற்கப்பட்டன.

பக்.25

## நிரந்தரத் தீர்வே எமது கோரிக்கை

**அதனையே ஜனாதிபதி வேட்பாளர்களிடம் முன் வைப்போம் என்கிறார் சுரேஷ் எம்.பி.**



வவுனியா, டிசெ. 7
தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு தரவேண்டும் என்ற கோரிக்கையை ஜனாதிபதி வேட்பாளர்களிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைக்கும் என்று தமிழ்த் தேசியக்

பக்.25

## ஈழத் தமிழர்களுக்கான தீர்வு; சென்னையில் இன்று மாநாடு

யாழ்ப்பாணம், டிசெ. 7
இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பிலான மாநாடு ஆளும் பாரதீய ஜனதாக் கட்சியின் ஏற்பாட்டில் தமிழகத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை இடம் பெறவுள்ளது.
இலங்கைக்குப் பயணம் மேற்கொண்ட, அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் முரளிதர் ராவ் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இலங்கைத் தமிழர்களின் வாழ்வாதாரப் பிரச்சினைகள் உள்ளிட்ட முக்கிய பிரச்சினைகள் இதன் போது விவாதிக்கப்பட உள்ளன.
இலங்கையைச் சேர்ந்த சில வல்லுநர்களும், இலங்கைத் தமிழர் நலனில் அக்கறை கொண்ட அமைப்பைச் சேர்ந்த தலைவர்களும் இதில் கலந்துகொள்ளவுள்ளனர்.
இன்று மாலை 'இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தீர்வை நோக்கி', "இந்திய மீனவர்கள் பிரச்சினையில் தீர்வை நோக்கி" என்ற தலைப்புகளில் கருத்தரங்கம் நடைபெறவுள்ளது.
இதில், இலங்கைப் பிரச்சினையில் தீர்வை நோக்கி'

பக்.25

# செய்திகள்

## மானிப்பாய் மருதடி மகா கும்பாபிஷேகம் 2015 பெப்ரவரியில்



வலி.தென்மேற்கு ,டிசெ. 7

குடாநாட்டில் பிரசித்தி பெற்ற ஆலயங்களில் ஒன்றான அடியார்கள் பத்து வருடங்களுக்கு மேலாக ஆவலுடன் எதிர்பார்த்திருந்த மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதி நடைபெறவுள்ளதை முன்னிட்டு இம்மாதம் 10 ஆம் திகதி புதன்கிழமை சங்கட சதுர்த்தி நன்நாளில் யந்திர பூசை ஆரம்பமாகி தொடர்ந்து 45 தினங்கள் நடைபெறவுள்ளது.

மேற்படி ஆலயம் 2004 ஆம் ஆண்டு முழுமையாக இடிக்கப்பட்டுத் தற்போதைய காலத்துக்கு ஏற்றவாறு திருப்பணி வேலைகள் பல கோடி ரூபா செலவில் ஆரம்பிக்கப்பட்டன.

இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட சிற்பக் கலைஞர்களின் உதவியுடன் கருங்கற்களினால் அமைக்கப்பட்டு வரும் மேற்படி ஆலயத்தின் மகா கும்பாபிஷேக நாளை அடியார்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருக்கிறார்கள்.

இந்த நிலையில் நிதி நிலை காரணமாக ஆலயத்தின் கட்டட வேலைகள் தாமதமடைந்தபோதிலும் தர்மகர்த்தா சபையினரின் விடா முயற்சியினால் தற்பொழுது கட்டட வேலைகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன.

அடியார்களின் ஆவலைப் பூர்த்தி செய்யும் வகையில் மேற்படி ஆலயத்தின் மகா கும்பாபிஷேகத்தை அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதி நடத்துவதற்கான ஏற்பாடுகளைத் துரிதமாக முன்னெடுத்து வரும் நிர்வாகத்தினர் எஞ்சியுள்ள திருப்பணி வேலைகளை முழுமையாக நிறைவு செய்வதற்கு அடியார்களிடம் நிதி உதவியைக் கோரியுள்ளனர்.

இதேவேளை, அடுத்த வருடம் மாசி மாதம் 2 ஆம் திகதி நடைபெறவுள்ள மகாகும்பாபிஷேகத்தை முன்னிட்டு இம்மாதம் 12 ஆம் திகதி புதன்கிழமை சங்கட சதுர்த்தி நன்நாளில் யந்திர பூசை ஆரம்பமாகி தொடர்ந்து 45 தினங்கள் நடைபெறவுள்ளது. நான்கு திசைகளிலும் கோபுரங்கள் அமைக்கப்பட்டுக் கம்பீரமாகக் காட்சியளிக்கும் மேற்படி ஆலயத்தில் தரைக்கு மாபிள் பதிக்கும் வேலைகளும் வர்ணம் பூசும் வேலைகளும் இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (த-115)

## வவுனியா வைத்தியசாலையில் இரத்தச் சுத்திகரிப்பு நிலையம்

### முதலமைச்சரால் நேற்றுத் திறந்து வைப்பு



யாழ்ப்பாணம், டிசெ.7

வவுனியா மாவட்டத்தில் சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வது கண்டறியப்பட்டதையடுத்து வடக்கு மாகாண சுகாதார அமைச்சினால் வவுனியா பொது வைத்தியசாலையில் சிறு நீரக நோயாளர்களுக்கான இரத்தச் சுத்திகரிப்புச் சிகிச்சை நிலையம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

மத்திய சுகாதார அமைச்சின் நிதிப் பங்களிப்புடன் இந்த இரத்த மாற்றுச் சிகிச்சை நிலையம் 8.5 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டது. அங்கு ஒரே தடவையில் 6 நோயாளர்களுக்குச் சிகிச்சை வழங்கக் கூடிய வசதிகள் உள்ளன.

இந்த நிகழ்வுக்கு வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகவும் சுகாதார அமைச்சர் மருத்துவர் ப.சத்திய லிங்கம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டு சிகிச்சை நிலையத்தைத் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் முதலமைச்சர் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

2011 ஆண்டில் நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 419 ஆகும். இவர்களில் 34 பேர் இந்த நோயினால் உயிரிழந்துள்ளனர். 2012 இல் 425 ஆகவும், 2013 இல் 430 ஆகவுள்ள பாதிக்கப்பட்டவர்களின் தொகை இந்த ஆண்டின் 3ஆம் காலாண்டில் 443 ஐ தாண்டியுள்ளது.

எனவே எமது வாழ்க்கை முறையில் மாற்றங்களை ஏற்படுத்தாவிட்டால் சிறுநீரக நோயினால் பாதிக்கப்படப் போகும் நோயாளிகளின் தொகை மீண்டும் உயரக் கூடும் என்பதை எம் மக்கள் மனதில் இருத்திக்கொள்ளவேண்டும்.

சிறுநீரகப் பாதிப்பு ஏற்படுவதற்குப் பல காரணங்கள் சொல்லப்பட்டாலும் விவசாய செய்கையில் கிருமிநாசினி பாவனை, செயற்கை உரப்பாவனை, குடிதண்ணீரிலுள்ள பாரலோகங்கள் போன்றவை இந்நோய் ஏற்படக்காரணமென எதிர்வு கூறப்படுகின்றது. நாம் எமது நன்மைக்காக இயற்கை வாழ்க்கைக்குத் திரும்ப வேண்டிய ஒரு கட்டாயத்துக்கு உள்ளாகியுள்ளோம்-என்றார். (த-4-421)



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவனினால் பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்ட நிதியில் இருந்து இரு வேறு பாடசாலைகளுக்கு ஒலி பெருக்கி சாதனங்கள் கையளிக்கப்பட்டன. இந்த நிகழ்வு நேற்று முன் தினம் முற்பகல் 10.30 மணியளவில் முதல் நிகழ்வாக கல்வியங்காடு இந்து தமிழ் கலவன் பாடசாலைக்கு 50 ஆயிரம் ரூபா பெறுமதியான ஒலிபெருக்கி சாதனங்களைக் கல்லூரி முதல்வர், மற்றும் மாணவர்களிடம் கையளித்தார். அதனைத் தொடர்ந்து முற்பகல் 11.30 மணியளவில் யாழ். நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலைக்கும் சாதனங்களை நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன் கையளித்தார்.(த)


**கனடாவில் படிக்க உழைக்க....**

- சில மாகாணங்கள் IELTS இன் அவசியத்தை வலியுறுத்தாது படிக்க உழைக்க மாணவர்களை உள்ளீர்க்கவுள்ளது.
- IELTS இருப்பின் விசா வெற்றி உறுதி.
- 2 நாள்கள் மட்டும் - திங்கள், செவ்வாய் நேரில் சந்தித்து விண்ணப்பிக்கலாம்.

**முற்பணம் - நுழைவுக்கட்டணம் இல்லவே இல்லை.**

**(ஞாயிறு மட்டும் விடுமுறை)**

**திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்**
175, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 221 9016




## வேட்பு மனு தாக்கல் நாளை

யாழ்ப்பாணம், டிசெ 7

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் நாளை இடம்பெறவுள்ள நிலையில், இதுவரை தேர்தல் வன்முறைகள் தொடர்பில் 46 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.


ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பு கடந்த நவம்பர் மாதம் 21 ஆம் திகதி விடுக்கப்பட்டது. அன்றிலிருந்து நேற்று வரையில் 46 முறைப்பாடுகள் தேர்தல்கள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதில் பாரதூரமான சம்பவங்கள் தொடர்பில் 11 முறைப்பாடுகளும், சிறு சம்பவங்கள் தொடர்பில் 35 முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன. துப்பாக்கிப் பிரயோகம், அச்சுறுத்தல் மற்றும் சொத்துக்களுக்குச் சேதம் ஏற்படுத்துதல் போன்ற பாரதூரமான சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

ஜனாதிபதி தேர்தலுடன் தொடர்புடைய முறைப்பாடுகளில் அதிகமாக ஏழு முறைப்பாடுகள் கொழும்பு மாவட்டத்தில் பதிவாகியுள்ளதாகத் தேர்தல்கள் செயலகம் குறிப்பிட்டுள்ளது. ஜனாதிபதித் தேர்தலுக்கான கட்டுப் பணம் செலுத்தும் நடவடிக்கை இன்று பகல் 12 மணியுடன் முடிவுக்கு வரவுள்ளது. நாளை காலை 9 மணியிலிருந்து 12 மணி வரையில் வேட்புமனுத் தாக்கல் இடம்பெறவுள்ளது. (த-5)

## கொஞ்சம் சிரிங்க பாஸ்...

அம்மா: என்னடி உன் புருஷன் தினமும்இப்படி குடிச்சுட்டுவராரே நல்லாவா இருக்கு.
மகள்: தெரியவில்லை. நான் இன்னும் டேஸ்ட் (சுவைத்து) பார்க்கவில்லை!!

நீ என் தங்கக் குட்டியாம். தாத்தா சொல்லுறதைக் கேட்பியாம். நான் உன் புத்தகப் பையைத் தூக்கிட்டு வருவேனாம். பாப்பா நீ நடந்து வருவியாம்.
வேண்டாம்தாத்தா.என்னுடையைத் தூக்கி நீ கஷ்டப்பட வேண்டாம். நானே என் பையைத் தூக்கிறேன். நீ என்னைத் தூக்கிக்கிட்டு வந்தாப் போதும்... அஸ்கு புஸ்கு யாருக்கிட்டே !




முகாமையாளர்: வேலைக்குச் சேரும்போது மாதம் 5 ஆயிரம் ரூபாய் சம்பளம். ஆறாவது மாதத்திலிருந்து சம்பளம் 8 ஆயிரம் ரூபாய். அப்ப நான் ஆறாவது மாதமே வேலைக்குச் சேர்ந்து கொள்கின்றேன்.

இப்படி குடித்து விட்டு மனைவியை அடிக்கிறேயே நீ எல்லாம் ஒரு மனுசனா ....? காணாமல் பேசாதே... அறைக்குள் அடிவாங்குறது நான் தான் ....!

## கல்யாணம் முதல் காதல் வரை கதாநாயகிக்கு திருமணம்




புதிய தலைமுறை தொலைக்காட்சியில் செய்தி வாசிப்பாளராக இருந்தவர் சத்யப்பிரியா. இவர் தற்போது விஜய் தொலைக் காட்சியில் ஒளிபரப்பாகும், கல்யாணம் முதல் காதல் வரை சின்னத்திரை தொடர்பில் கதாநாயகியாக நடித்துக் கொண் டிருக்கின்றார்.
இவருக்கு அடுத்த ஆண்டு உண்மையிலேயே திரு மணம் நடக்கவுள்ளது. இது தொடர்பில் சத்யப் பிரியா தெரிவிக்கையில், பொறியியல் படித் தேன். அதன் பின்னர் தகவல் தொழில் நுட்ப நிறுவனம் ஒன்றில் வேலை பார்த் தேன். இதன் போது, புதிய தலைமுறைத் தொலைக்காட்சியில் செய்தி வாசிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. இதன் போது கல்யாணம் முதல் காதல் வரை தொட ரில் நடிக்கக் கூப்பிட்டார்கள்.
எனக்கு அதுவரையில் நடிப்புத் தெரி யாது. இப்போதுதான் நடிக்கப் பழகிக் கொண்டிருக்கின்றேன். இதுவரையில் சுமார் 40 எபிசோட்கள் வரையில் நடித்துக் கொடுத்து விட்டேன். எனது நடிப்பு நன்றாக இருக்கின்றது என்று சொல்கின்றனர். மிகவும் மகிழ்ச் சியாக இருக்கின்றது.
எனக்கு அடுத்த ஆண்டுதிருமணம்நடக்கவுள்ளது. பெற்றோர்கள்பார்க்கும்மாப்பிளையே திருமணம் செய்யப் போகின்றேன் என்றார்.

## சூரியப் புயல்?

சூரியப் புயல் பூமியை தாக்கும் அபாயம் உள்ளதாக விண்வெளி இயற்பியல் துறைப் பேராசிரியர் டானியல் பக்கர் தலைமையிலான குழு கண்டறிந்துள்ளது.
சூரியன் எந்த நேரமும் காந்தப் பண்புகள் அடங்கிய மாபெரும் வாயு வெடிப்பை வெளிப்படுத்திக் கொண்டே இருக்கிறது. சூரிய மண்டலத்தில் ஏற்படும் பெரு வெடிப்பு நிகழ்வான, தீவிர உயர் ஆற்றல் கதிர்வீச்சு வெடிப்பும் சேர்ந்து கொள்ளும் போது, அது சூரியப் புயல் என்று அழைக்கப்படுகிறது.
இந்த நிலையில் சூரியப் புயலின் போது அதிதீவிர வெப்ப ஆற்றலானது சூரியனின் மேற்பரப்பிலிருந்து விண் வெளியை நோக்கி எறியப்படுகிறது. மேலும் சூரியனின் மேற்பரப்பில் ஏற்படும் கரும்புள்ளிகளே வாயு வெடிப் புக்கு வழிவகுக்கின்றன.
தற்போது சூரியப் புயல், பூமியின் காந்தப் புலப் பாதையைத் தாக்கி னால், விண்வெளியில் சுற்றிக் கொண்டிருக்கும் செயற்கைக் கோள்களுக்கு பாதிப்பு ஏற்படக்கூடும். இதன் மூலம் அமெரிக்கா வில் மட்டும் 0.6 முதல் 2.6 டிரில்லியன் டொலர் வரை சேதம் ஏற்படும் எனவும் தெரிவித்துள்ளனர்.
இதற்கிடையே கடந்த ஒக்டோபர் 24 ஆம் திகதி சூரியனில் ஒரு மாபெரும் கரும்புள்ளி தோன்றியது. ஏ.ஆர் 12192 என்று பெயரிடப்பட்ட அந்தக் கரும்புள்ளியானது பூமியின் விட்டத்தை விட 10 மடங்கு பெரியது.




## நீங்களும் வீட்டில் செய்து பாருங்கள்






| | மருதனார்மடம் | சுன்னாகம் | சாவகச்சேரி | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|---|
| கத்தரி | 200 | 160 | 100 | 200 | 140 | 180 |
| கரட் | 250 | 180 | 150 | 200 | 200 | 220 |
| மரவள்ளி | 35 | 40 | 35 | 50 | 40 | 50 |
| கருணைக்கிழங்கு | 40 | 45 | 55 | 80 | 80 | 80 |
| பயிற்றை | 400 | | 250 | 300 | 240 | 200 |
| பாவல் | 400 | | 300 | | 300 | 180 |
| வெங்காயம் | 80 | 80 | 120 | 120 | 80 | 120 |
| பூசணி | 40 | 200 | 20 | 50 | 35 | 50 |
| தக்காளி | 200 | 70 | 120 | 200 | 180 | 180 |
| வாழைக்காய் | 70 | 25 | 90 | 80 | 70 | 90 |
| கீரை | 60 | 130 | 50 | 20 | 60 | 30 |
| பொன்னாங்காணி | 50 | 260 | | 50 | 40 | 25 |
| உருளைக்கிழங்கு | 120 | 320 | 100 | 140 | 140 | 140 |
| லீக்ஸ் | 300 | 90 | 200 | 280 | 240 | 240 |
| பீற்றூட் | | 120 | 80 | 240 | 150 | 240 |
| மிளகாய் | 300 | 120 | 300 | 300 | 250 | 200 |
| வெண்டி | 200 | 200 | 120 | 120 | 140 | 400 |
| கோவா | 120 | | 90 | 120 | 120 | 120 |
| புடோல் | 120 | | 100 | 120 | 100 | 120 |
| போஞ்சி | 200 | | 120 | 200 | 200 | 80 |
| தேசிக்காய் | 200 | | 120 | 100 | 120 | |

## தமிழக மீனவர்கள் சர்வதேச எல்லையை இனிமேல் கடவார்

சென்னை, டிசெ.7
தமிழ் நாட்டின் ஆறு மாவட் டங்களை சேர்ந்த மீனவர் கள், சர்வதேச கடல் எல்லையை கடந்து மீன் பிடிக்கச் செல்வ தில்லை எனத் தீர்மானித்துள் ளனர். இராமநாதபுரம், திரு வாரூர், தஞ்சாவூர், காரைக் கால் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மீனவர்களே இந்தத் தீர்மா னத்தை எடுத்துள்ளனர். மீன வர் சந்திப்பொன்றின்போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட் டுள்ளது. சுமுகமான முறை யில் மீன்பிடித்தொழிலை மேற் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என வற்புறுத்தியுள்ள அவர்கள், இலங்கையில் தடுத்துவைக் கப்பட்டுள்ள 38 மீனவர்களை விடுவிப்பதற்கானநடவடிக்கை கள் எடுக்கப்படவேண்டும் என்றும் தெரிவித்துள்ளனர். இலங்கைக் கடற்படையின ரால் கைப்பற்றப்பட்ட படகு கள் மற்றும் வலைகளை மீட் டுத் தருமாறு அவர்கள் மத் திய மாநில அரசுகளை வலி யுறுத்தியுள்ளனர். (த)



# வணிகம்

## சிறப்பான பேறுகளை பதிவு செய்கின்றது சி.ஐ.சி ஹோல்டிங்ஸ்

CIC nurturing life

சி.ஐ.சி. ஹோல்டிங்ஸ் பிஎல்சி, 2014 செப்டெம்பர் 30ஆம் திகதியுடன் நிறைவடையும் 2014/2015ஆம் ஆண்டுகளுக்கான நிதியாண்டின் இரண்டாம் காலாண்டின் போது அதி சிறப்பான நிதிப் பேறுகளைப் பதிவு செய்துள்ளது.

பன்முகப்படுத்தப்பட்ட குழுமத்தின் மொத்த விற்பனை 2014ஆம் ஆண்டு ஏப்ரல் 1 முதல் செப்டெம்பர் 30 வரையான காலப்பகுதியில் ரூபா 11,235 மில்லியன்களாக பரிணமித்தது.

இது 2013ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியின் போதான வருமானத்தின் 7வீத அதிகரிப்பாகும். கியூ 2 இன் இறுதியில், தொடர்ச்சியான செயற்பாடுகளில் இருந்ததான வரிக்குப் பிந்திய இலாபம் ரூபா 513 மில்லியன்களாக இருந்தது. இது கடந்த ஆண்டின் வருமானத்தின் எட்டு மடங்காகும். நுகர்வோர், சுகாதார பாதுகாப்பு, விவசாயம், கால்நடைகள் போன்ற பிரிவுகள் குழுமத்தின் வருமானத்தில் குறிப்பிடத்தக்க பங்கு வகித்தன.

கம்பனி மற்றும் குழுமத்தின் தொடர்ச்சியான வியாபாரத்தில் இருந்ததான இலாபம் முறையே 149 வீதம் மற்றும் 723 வீதம் ஆகிய வீதங்களினால் அதிகரித்துள்ளது. இது பிரதானமாக வருமான அதிகரிப்பு காரணமாகவும் தொழிற்பாட்டுச் செலவினங்களைக் கட்டுப்படுத்துவதில் கம்பனி அதீத கவனம் செலுத்துகின்றமையினாலும் ஆகும். நுகர்வோர் மற்றும் சுகாதார பாதுகாப்புப் பிரிவு, பொதியிடல் பிரிவு, கைத்தொழில் மூலப்பொருள்கள் பிரிவு ஆகியவற்றின் இலாப அதிகரிப்புக்கள் முறையே 167 வீதம், 52 வீதம் மற்றும் 13வீதம் ஆகும்.

கணக்கில் பதியப்பட்ட உரிமைப்பங்குகள் இலாபத்தில் குறைவைக் காட்டுகின்ற போதிலும் குழுமத்தின் ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகைக்கு அதன் வியாபாரம் காத்திரமான பங்களிப்பை வழங்கியுள்ளது.

குழுமத்தின் தொடர்ச்சியான தொழிற்பாடுகளின் மேம்பாடு, தொடர்ச்சியான தொழிற்பாடுகளின் பங்குகளின் தலா வருமானத்தை ரூபா 3.93ஆக ஐந்து மடங்கு அதிகரிப்பை ஏற்படுத்தியுள்ளது. (த)

# ஏசியன் அலையன்ஸ் இன்சூரன்ஸின் வரிக்குப் பிந்திய இலாபம் 532 மில்லியன்




சொப்ட்லொஜிக் குழுமத்தின் அங்கத்துவ நிறுவனமான ஏசியன் அலையன்ஸ் இன்சூரன்ஸ் பிஎல்சி, செப்டெம்பர் 2014 உடன் நிறைவடைந்த 3 ஆம் காலாண்டின் வரிக்குப் பிந்திய இலாபமாக 532 மில்லியன் ரூபாவை பதிவு செய்துள்ளது. குறித்த காலப்பகுதியில் ஆயுள் தவணைக்கட்டணங்கள் 21 வீத அதிகரிப்பை பதிவு செய்து, 2.2 பில்லியன் ரூபாவாக பதிவாகியிருந்தது. இதில் பதிவாகிய 378 மில்லியன் ரூபா அதிகரிப்பு என்பது துறையில் பதிவாகிய உயர் பெறுமதியாகக் காணப்பட்டது. கம்பனியின் முதலீட்டுத்திணைக்களம் எய்தியிருந்த சிறந்த பெறுபேறுகளுடன் இணைந்து இது பதிவாகியிருந்தது. இந்தப் பெறுபேறுகளில் முதல் காலாண்டுக்கான ஆயுள் பிரிவின் பெறுபேறுகள் உள்ளடங்கியுள்ளதுடன், ஏனைய மூன்று காலாண்டுகளுக்கான பெறுபேறுகள் முழுமையான காலப்பகுதியில் பிரதிபலிக்கப்படும்.

முதல் ஒன்பது மாத காலப் பகுதிக்கான மொத்த தவணைக் கட்டணங்கள் 3.48 பில்லியன் ரூபாவாக பதிவாகியிருந்தது. பொது காப்புறுதி தவணைக் கட்டணங்கள் 1.3 பில்லியன் ரூபாவாகும். ஆயுள் பிரிவின் வரிக்கு பிந்திய இலாபம் 511 மில்லியன் ரூபாவாக பதிவாகியிருந்தது. பொது காப்புறுதி பிரிவு 21 மில்லியன் ரூபாவாக பதிவாகியிருந்தது. முதல் ஒன்பது மாத காலப்பகுதிக்கான கம்பனியின் பெறுபேறுகள், துறையின் ஏனைய நிறுவனங்களை விட சிறந்த மட்டத்தில் காணப்படுகிறது,

ஆயுள் மற்றும் பொதுத் துறைகளில் ஒட்டுமொத்த வளர்ச்சி வீதம் முறையே 8 வீதம் மற்றும் 2 வீதம் ஆகப் பதிவாகியிருந்தன. துறையின் முன்னோடியாக திகழ்வது தொடர்பில் சொப்ட்லொஜிக் குழுமத்தின் மூலமாக முன்னெடுக்கப்படும் பெறுமதி வாய்ந்த கொள்கைகளுக்கமைவான திட்டங்களின் மூலம் எய்தப்பட்ட உறுதியான பெறுபேறுகளாக இது அமைந்துள்ளது. வளர்ச்சி தொடர்பில் கம்பனி இலட்சியத்துடனான பயணத்தை மேற்கொண்டுள்ளது. காப்புறுதித் துறை தொடர்பில் தளரா நம்பிக்கை கொண்டுள்ளதுடன், வேகமாக முன்னேற்றம் கண்டு வரும் இலங்கையின் பொருளாதாரத்தின் மீதும் அதிக அளவு நம்பிக்கை கொண்டுள்ளது. ஏசியன் அலையன்ஸ் இன்சூரன்ஸ் ஆயுள் பிரிவு என்பது சந்தையில் ஐந்தாமிடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளது. வாடிக்கையாளர்களுக்கு உயர்ந்த சேவைகளை வழங்கி வருவதுடன், துறையில் ஒப்பற்ற சேவைகளையும் வழங்குகிறது. இந்த நிறுவனத்தின் நோக்கம் என்பது தளம்பாமல் காணப்படுவதுடன், சிறந்த பாதுகாப்பு திட்டங்களை வழங்குவது தொடர்பில் கவனம் செலுத்தி வருகிறது. (த)

# ஏன் நாம் ESOFT ஐ தெரிவு செய்ய வேண்டும்?

**ESOFT Metro Campus** நிறுவனமானது, இலங்கையில் மிகப் பெரிய தகவல் தொழிநுட்ப வலையமைப்பினைக் கொண்டுள்ளது. தகவல் தொழிநுட்பம், ஆங்கிலம், வியாபார முகாமைத்துவம் மற்றும் பொறியியற்றுறை போன்ற சர்வதேச தரம் வாய்ந்த கற்கைநெறிகளை மாணவர்களுக்குப் போதிப்பதில் இலங்கையில் முதற்தரக் கணினி நிறுவனமாகத் திகழ்கின்றது.

இலங்கையில் 14 வருடகால நம்பகமான உயர்கல்விச்சேவையை மாணவர்களுக்கு வழங்கிவரும் **ESOFT** நிறுவனம் 3 வருடப் பட்டப்படிப்பினை முதல் இரு ஆண்டுக் கல்வியான சர்வதேச அங்கீகாரமுள்ள **Higher National Diploma (BTEC HND)** இனை குறைந்த மூலதனத்துடன் யாழ்ப்பாணக் கிளையிலே கற்கக்கூடிய சந்தர்ப்பத்தை வழங்குவதுடன், பட்டப்படிப்பின் இறுதி ஆண்டை பல்கலைக்கழகங்கள் மாணியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தலைசிறந்த இங்கிலாந்துப் பல்கலைக்கழகங்களின் பட்டமொன்றினை யாழ்ப்பாணத்தில் இருந்தவாறே பூர்த்தி செய்யும் சந்தர்ப்பம் ஒன்றினை வழங்குகின்றது.

இலங்கையில் மிகப் பிரசித்தி பெற்ற தரமான கல்வியை வழங்கும் **ESOFT** நிறுவனமானது, இங்கிலாந்து **Edexcel** நிறுவனத்தின் இலங்கையின் மிகத்துரிதமாக வளர்ந்து வரும் **Edexcel** நிலையமாக காணப்படுவது சிறப்பம்சமாகும். கல்விக்கு பிரபல்யமான யாழ்ப்பாணத்தில் மிகச் சிறந்த முழுநேர, பகுதிநேர விரிவுரையாளர்களைத் தன்னகத்தே கொண்டுள்ள **ESOFT** யாழ். கிளையானது **HND** கல்வியைப் போதிப்பதற்குப் பயிற்றப்பட்ட **Bachelor, Master,** பட்ட, பட்ட மேற்படிப்புகளை உடைய விரிவுரையாளர்கள் மூலம் இக் கல்வியினை மாணவர்களுக்கு போதிப்பது சிறப்பம்சமாகும்.

மாணவர்கள் கல்வியைக் கற்பதற்கு ஏற்றவாறு குளிரூட்டப்பட்ட வகுப்பறைகள், நவீன ஆய்வுகூட வசதிகள், வரையறையற்ற இணையத்தள வசதிகள், நூலக வசதிகள் என்பவற்றைக் கொண்டுள்ளதுடன், மாணவர்களது கற்றல் செயற்பாட்டுக்கு மேலும் வலுவூட்டுவதற்காகக் கற்கை நெறி அனைத்திற்குமான பாடப் புத்தகங்கள் முற்றிலும் இலவசமாக **ESOFT** இனால் மட்டுமே வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது. அத்துடன் ஐம்பது ஆண்டுகால பிரசித்தி பெற்ற பிரித்தானியா **"Chartered Institute of IT" (BCS)** நிறுவனத்தின்



மூன்று நிலைகளையும் போதிப்பதற்கு இலங்கையில் அங்கீகாரம் பெற்ற ஒரே ஒரு நிறுவனமாகக் காணப்படும் **ESOFT, BCS** நிறுவனத்தின் பட்டப்படிப்பின் இறுதி ஆண்டினைப் **HND** பூர்த்தி செய்த மாணவர்களுக்கு இலவசமாக வழங்குவது குறிப்பிடத்தக்கதாகும்.

நம்பகமான உயர் கல்வியை போதிப்பதில் கடந்த 2000 ஆண்டு முதல் கல்வித்துறையில் சிறந்து விளங்கும் **ESOFT** நிறுவனமானது **ISO 9001:2008** தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனமாகும். கடந்த பிரிவில் பூர்த்தி செய்த மாணவர்களுடன் சேர்ந்து சவால்மிக்க உலகில் நின்று நிலைத்திட **ESOFT** இனை நாடுங்கள். தற்போது யாழ். நகரில் முற்றிலும் நவீனமயப்படுத்தப்பட்ட **ESOFT Metro Campus Jaffna** கிளையை **Diplomas, HND, Degree** போன்ற துறைகளுக்காக ஆரம்பித்துள்ளனர்.

# 2015 இல் தொலைத் தொடர்பாடல் நிறுவனங்களின் முதலீடு அதிகம்

அடுத்த ஆண்டில் தொலைத் தொடர்பாடல் நிறுவனங்களின் முதலீடுகள் அதிகளவில் காணப்படும் எனப் 'பிட்ச் ரேட்டிங்' அறிவித்துள்ளது.

நாட்டில் டேட்டா பாவனை மற்றும் தொலைபேசிகளின் பாவனை அதிகரித்துச் செல்வதன் காரணமாகச் சகல தொலைத்தொடர்பாடல் நிறுவனங்களுக்கும் தமது 3 ஜி/ 4 ஜி வலையமைப்புகளை விஸ்தரிப்பதற்காக அதிகளவு முதலீடுகளை மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்படுமென இந்த அமைப்பு அறிவித்துள்ளது. (த)

செய்திகள்

# இப்படியான தேர்தலை எதிர்பார்க்கவேயில்லை

## அமைச்சர் ரிசாத் பதியுதீன் கூறுகின்றார்

கொழும்பு, டிசெ. 7

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு இன்னும் 2 வருடங்கள் பதவிக்காலம் உள்ள நிலையில் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது. இப்படியானதொரு தேர்தல் ஒன்றை நாம் எதிர்பார்க்கவில்லை என்று தெரிவித்துள்ளார் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிசாத் பதியுதீன்.


எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் அவர் தலைமையிலான இலங்கை மக்கள் காங்கிரஸ் யாருக்கு ஆதரவு வழங்கும் எனக் கேட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

எதிர்வரும் தேர்தலில் யாருக்கு ஆதரவு அளிப்பது என்பது தொடர்பில் எமது கட்சி கடந்த சில தினங்களாக கட்சி ஆதரவாளர்கள், புத்தி ஜீவிகள், உலமாக்களை கண்டு அவர்களுடன் கலந்தாலோசித்திருகின்றோம்.

இந்த நாட்டில் 10 வீதமான முஸ்லிம்கள் வாழ்கின்றனர். 30 வருடகாலமாக உள்நாட்டுப் போர்ச் சூழலில் விடுதலைப் புலிகளால் பல இன்னல்களை அனுபவித்தோம். சமாதானம் ஏற்பட்ட பிறகு முஸ்லிம்களுக்கு பொதுபலசேனா, சிஹல உறுமய போன்ற பௌத்த இனவாத கட்சிகளினால் முஸ்லிம்களுக்கு பெரும் கஷ்டங்கள் ஏற்பட்டன. இந்த விடயத்தில் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணைந்து ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுத்தோம். சிறுபான்மை சமூகம் என்ற ரீதியில் நாங்கள் ஒன்று கூடி பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வந்துள்ளோம்.

இந்தத் தருணத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் ஒருவர் எதிர்க் கட்சி பொதுவேட்பாளராக போட்டியிடுகின்றார். ஜனாதிபதியை ஆதரிப்பதற்கு மலையகக் கட்சிகள், தேசிய காங்கிரஸ் முடிவை எடுத்துள்ளனர். எமது கட்சி நீண்டகாலமாக மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் உள்ளது. இந்த சூழ்நிலையில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமையும் சந்தித்து கலந்துரையாடினேன். இந்த சந்திப்பில் முஸ்லிம் சமூகத்தின் எதிர்கால நன்மை கருதி முஸ்லிம் மக்களின் பொருளாதார நிலை, வாழ்வாதாரம், இருப்பு ஆகியவை தொடர்பில் கலந்துரையாடினோம். இது தொடர்பில் மீண்டும் அவரை சந்தித்துப் பேசவுள்ளேன். நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் யாருக்கு ஆதரவு வழங்குவது என்ற முடிவு விரைவில் எட்டப்படும் – என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

(ற–10)



ஆளும் கட்சியில் இருந்து எதிரணிக்குத் தாவிய எம்.கே.ஏ.டிஎஸ்.குணவர்த்தன கடந்த வியாழக்கிழமை தனது சொந்த ஊரான கந்தளாய்க்குச் சென்றிருந்தார். அங்கு அவருக்குப் பெரும் வரவேற்பு நடத்தப்பட்டது. மக்கள் வெடிகள் கொளுத்தி பெரும் ஆரவாரத்துடன் அவரை வரவேற்றனர். அதில் சேருவர தேர்தல் தொகுதி அமைப்பாளர் அருண ஸ்ரீசேனவும் கலந்துகொண்டார். (ற–10)

## ஆலோசகர் பதவி அஸ்வருக்கு

கொழும்பு, டிசெ.7

வெகுசன ஊடக மற்றும் தகவல் அமைச்சின் முன்னாள் கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினரான ஏ.எச்.எம்.அஸ்வர் வெகுசன ஊடக மற்றும் தகவல் அமைச்சு மற்றும் ஜனாதிபதியின் நாடாளுமன்ற அலுவல்கள் சிரேஷ்ட ஆலோசகராகவும் நியமனம் செய்யப்பட்டுள்ளார். ஏ.எச்.எம்.அஸ்வர் தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து விலகியிருந்த நிலையிலேயே இந்தப் பதவி அவருக்குவழங்கப்பட்டுள்ளது. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பு நிபந்தனைச்சட்டம் 41 (1) இன் கீழ் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நியமனக் கடிதத்தில் கையொப்பம் இட்டுள்ளார். (ற–10)

# நேரடி விவாத நிகழ்ச்சிகளில் ஆளும் தரப்பினர் பங்கேற்கார்

## ஊடகத்துறை அமைச்சர் கூறுகின்றார்

கொழும்பு, டிசெ.7

எதிர்வரும் காலங்களில் சடன, வாதபிடிய, ஜனஹண்ட அரசியல் விவாத நிகழ்சிகளை அரச தரப்பு உறுப்பினர்கள் புறக்கணிக்கத் தீர்மானித்துள்ளனர் என்று ஊடக அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

தெரன தொலைக்காட்சி அலைவரிசையில் இடம்பெற்ற வாதபிடிய நிகழ்சிக்கு வந்த ஒரு தொலைபேசி அழைப்பால் நிகழ்ச்சியில் குழப்ப நிலை ஏற்பட்டமையைத் தொடர்ந்து ஊடக அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தெரண தொலைக்காட்சி அலைவரிசையில் இடம்பெற்ற அரசியல் விவாத நிகழ்வில் மாத்தறை சனில் என தன்னை அடையாளப் படுத்தி தொலைபேசி அழைப்பினை மேற்கொண்ட ஒருவர் தன்னை அவமானப்படுத்திவிட்டார் என்று விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே மிரிஹானை பொலிஸில் முறைப்பாடொன்று பதிவு செய்துள்ளார். தொலைபேசி அழைப்பை மேற்கொண்டவர் தன்மீது பொய்யான குற்றச்சாட்டுக்களைச் சுமத்தினார் என்றும் அதனால் தானும் டாக்டர் ரமேஸ் பத்திரணவும் அந்த நிகழ்ச்சியிலிருந்து வெளியேறியதாகவும் அமைச்சர் தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

மேற்படி அழைப்பை மேற்கொண்டவருக்கு எதிராக அமைச்சர் செய்துள்ள பொலிஸ் முறைப்பாட்டுக்கிணங்க குற்ற விசாரணைப் பிரிவினர் நடத்திய விசாரணைகளில் குறித்த தொலைபேசி இலக்கம் ரஞ்சன் ராமநாயக்கவின் பெயரில் பதிவாகியுள்ளமை தெரியவந்துள்ளது எனவும் இது தொடர்பில் வழக்கொன்று தாக்கல் செய்யப்படவுள்ளது என்றும் பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இந்த நிலையில் எதிர்வரும் காலங்களில் சடன, வாதபிடிய, ஜனஹண்ட அரசியல் விவாத நிகழ்சிகளை அரச தரப்பு உறுப்பினர்கள் புறக்கணிக்கத் தீர்மானித்துள்ளனர் என்று ஊடக அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

இனிவரும் காலங்களில் ஆளுங்கட்சி உறுப்பினர்கள், அமைச்சர்கள் நேரடி தொலைக்காட்சி விவாதங்களில் கலந்துகொள்ள மாட்டார்கள். குறிப்பாகசிரச தொலைக்காட்சியில் இடம்பெறும் சடன அரசியல் விவாத நிகழ்ச்சி, தெரண தொலைக்காட்சியில் இடம்பெறும் வாதபிடிய அரசியல் விவாத நிகழ்ச்சி, டீ.என்.எல் தொலைக்காட்சியில் இடம்பெறும் ஜனகன்ட அரசியல் விவாத நிகழ்ச்சி ஆகியவற்றை அரச தரப்புஉறுப்பினர்கள் புறக்கணிக்கத்தீர்மானித்துள்ளனர். – என்று கூறியுள்ளார். (ற–10)

மரண அறிவித்தல்



Blossom Thangaranee Gunaratnam

யாழ்ப்பாணம் திருநெல்வேலி சீமா சில்க் தொழிலகத்தின் நிறுவனரும் தலைவருமான ஆர்.ஜே. குணரத்தினம் அவர்களின் அன்புத் துணைவியார் புளொசம் தங்கராணி 2014 டிசெம்பர் 2 ஆம் திகதி கர்த்தருக்குள் நித்திரையடைந்து விட்டார். அன்னார் காலஞ்சென்ற வண. என். கதிரவேலு திருமதி கதிரவேலு தம்பதியினரின் அருமை மகளும் நிமலனின் பாசமிகு சகோதரியும், கிறிஷாந்தி, றோஷன், நிரஞ்சன் ஆகியோரின் அருமைத் தாயாரும் டாக்டர் நந்தன் பரமானந்தம், பிரமோ, டியானா ஆகியோரின் மாமியாரும் பிரவீன், பிரேம், மேனகா, துளசி, மைதிலி மற்றும் கீத், மிஷேல், இஷானி, வேர்டி, டிலன், றொக்கோ ஆகியோரின் பாட்டியும் பூட்டியும் ஆவார். அன்னாரின் நல்லடக்க ஆராதனை 10ஆம் திகதி புதன்கிழமை 2014இல் சென் ஜோர்ஜ் தேவாலயம், ஹரோவில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்துக்காக மிடில்செக்ஸுக்கு எடுத்துச் செல்லப்படும்.

R.J Gunaratnam
Flat 12, Tapley Court 17, St. John's Road, Harrow
Ha1 2HZ, U.K TEL: 00442084278047




உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

புதிய கல்வியாண்டு ஆரம்பத்தை முன்னிட்டு விசேட தள்ளுபடியுடனான விற்பனை

- பாடசாலை மாணவர்களுக்கான அப்பியாசக் கொப்பிகள், பயிற்சிப் புத்தகங்கள் மற்றும் அனைத்து கல்விசார் உபகரணங்களும் விசேட விலைக்கழிவுடன் விற்பனையாகின்றன.
- டிசம்பர் 07 ஆம் திகதியிலிருந்து ஜனவரி மாத நடுப்பகுதிவரையான அனைத்து ஞாயிற்றுக்கிழமைகளிலும் வாடிக்கையாளர் சேவை வழங்கப்படும்.
- இன்று (07 - 12 - 2014) யா/ புத்தூர் இந்து ஆரம்பப்பாடசாலையில் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்களின் வேண்டுகோளுக்கு இணங்க விசேட புத்தக, ஸ்ரேசனறிப் பொருள்கள் கண்காட்சியும் விற்பனையும் இடம்பெறும்.

ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
212, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்
T.P: 021 222 5542
(சி/18082)

கருத்து

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## 100 நாள் வேலைத் திட்டத்துக்குள் தீர்வும் உள்ளடக்கப்படவேண்டும்

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்று 100 நாள்களின் பின்னர், தான் அமைக்கப்போகும் தேசிய அரசே இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து ஆராயும் என்று பொது .எதிரணி வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன தெளிவுபடுத்தியுள்ளார்.

லண்டன் பி.பி.ஸியின் சிங்கள சேவையான 'சந்தேசிய'வுக்கு வழங்கிய செவ்வியில் அவர் இதனைத் தெளிவுபடுத்தியுள்ளார். தமிழர்களின் பிரச்சினைக்கு - சிறுபான்மை மக்களின் பிரச்சினைக்கு மைத்திரிபாலவிடம் எந்தவொரு தீர்வுத் திட்டமும் இல்லை என்பதே அதன் பொருள். நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் இனப்பிரச்சினைத் தீர்வு விடயம் இரண்டாம் பட்சமாக ஒதுக்கித் தள்ளப்பட்டுவிட்டமை தெளிவாகின்றது.

மைத்திரிபால வெற்றி பெற்று தேசிய அரசு ஒன்றை அமைத்த பின்னர் தமிழர் பிரச்சினைக்கு - சிறுபான்மையினரின் சிக்கலுக்குத் தீர்வு கிடைக்கும் என்று எதிர்பார்க்கலாமா? வரலாற்றில் இருந்து அதற்கான பதில் ஆம் என்பதாக இல்லை. தேசிய அரசு என்பது பெரும்பாலும் அனைத்து சிங்கள, பௌத்த தேசியவாத மற்றும் இனவாதக் கட்சிகளைக் கொண்டதாகவே அமையும். அப்படிப்பட்ட ஓர் அரசின் மூலம் இனச் சிக்கலுக்கு ஒரு தீர்வைக் காண்பது சாத்தியமற்றது. அதிலும் ஜே.வி.பி. மற்றும் ஹெல உறுமய போன்ற கட்சிகளை உள்ளடக்கிய ஒரு தேசிய அரசு, தமிழர்களின் பிரச்சினையை - சிறுபான்மையினரின் பிரச்சினையை நீதியாக, நேர்மையாக அணுகப் போவதில்லை. அதை அவை கடந்த காலங்களில் தெளிவாக வெளிப்படுத்தியிருக்கின்றன.

மஹிந்த ராஜபக்ஷ அமைத்துள்ள நாடாளுமன்றத் தெரிவுக் குழுவுக்கும், மைத்திரிபால அமைக்கப்போகும் தேசிய அரசுக்கும், இனப் பிரச்சினை விடயத்தில் அடிப்படையில் பெரிய வேறுபாடுகள் ஏதும் இல்லை. அரசியல் தீர்வு காண்பதைத் தாமதப்படுத்தும் அல்லது காலத்தை இழுத்தடிக்கும் முயற்சியாக மட்டுமே அது அமைய முடியும். எனவே மைத்திரிபாலவின் இந்த முடிவு தமிழர்கள் மத்தியில் வரவேற்பைப் பெறாது என்பது திண்ணம்.

இப்போது அரசியல் தீர்வு விடயத்தில் மைத்திரிபாலவின் நிலைப்பாடு தெரிந்துவிட்டதால், தீர்வு குறித்த அதிரடி அறிவிப்பை மஹிந்த தனது தேர்தல் அறிக்கையில் வெளியிடுவதற்கு வாய்ப்பு உண்டு. தான் அளிக்கும் வாக்குறுதியை நிறைவேற்றும் பழக்கத்தை மஹிந்த கொண்டிருக்காதபோதும், அவ்வாறான அறிவிப்பு ஒன்று விடுக்கப்படும் பட்சத்தில் தமிழர்கள் முடிவெடுப்பத்தில் தடுமாற்றத்துக்கு உள்ளாவதற்கும் வாய்ப்பு உண்டு.

எனவே, தமிழர்களின் ஆதரவு தனக்கு வேண்டும் என்று மைத்திரிபால விரும்பினால், தனது 100 நாள் வேலைத் திட்டத்திற்குள் தீர்வு முயற்சியையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். அதை எப்படிச் செய்வது என்பதை சந்திரிகா அம்மையாரிடம் இருந்து அவர் கற்றுக்கொள்ள முடியும். 1994இல் அவர் அமைதிப் பேச்சை எவ்வளவு விரைவாக ஆரம்பித்தார் என்பதையும், மக்களைக் கவர அதனை எப்படி ஓர் ஆயுதமாகப் பயன்படுத்த முடியும் என்பதையும் சந்திரிகாவிடம் இருந்து விரிவாகக் கற்றுக்கொள்ள முடியும். அதனை மைத்திரிபால மேற்கொள்ளாத வரையில் அவருக்கு தமிழர்களின் ஆதரவு கிடைப்பது துர்லபமே.

# ஆட்டம் காணும் களம் தமிழர் நிலை என்ன?

மன்னார் சிந்தா



ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரகடனம் வெளியிடப்பட்ட பின்னர் ராஜபக்ஷ அரசுக்கான ஆதரவுத் தளம் ஆட்டம்கண்டு வருகிறது. சுகாதார அமைச்சராகவிருந்த மைத்திரிபால சிறிசேன எதிரணி சார்பில் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிட முன் வந்தபோதே மூத்த அமைச்சர்கள் சிலரும் அரசை விட்டு நீங்கி எதிரணிக்குத் தாவிவிட்டனர்.

சுதந்திரக்கட்சியின் அடிமட்ட உறுப்பினரான மைத்திரிபால சிறிசேனவின் பின்னணியில் சந்திரிகா என்னும் பெரும் விருட்சம் நிழல் கொடுத்து நிற்கிறது. சந்திரிகா நீண்ட அரசியல் பின்னணி கொண்டவர் என்பதுடன் அரசுக்குத் தலைமை தாங்கிய அனுபவமும் கொண்ட ஒருவர். அந்த வகையில் சந்திரிகாவுக்கு சிங்கள மக்கள் மனதில் நீங்காத இடம் ஒன்றுள்ளது. அத்துடன் பண்டாரநாயக்கா குடும்பத்தின் செல்வாக்கு இன்றும் அவருக்குத் துணையாகவே நிற்கிறது. இதனால் சுதந்திரக் கட்சியின் அடிமட்ட உறுப்பினர்களும் தொண்டர்களும் சந்திரிகாவின் பின்னால் அணி திரளவே செய்வார்கள். அரசில் அங்கம் வகிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒரு தரப்பினர் இனியும்கூட அரசைவிட்டு விலகி எதிரணியில் இணையக் கூடுமெனவும் நம்பப்படுகிறது. எனவே ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கான சிங்கள மக்களின் ஆதரவு இந்தத் தேர்தலில் கணிசமாகக் குறையக் கூடிய வாய்ப்புகளே அதிகம். இதனால் தான், இந்த அதிகாரப் போட்டி, ஏறக்குறைய சமபலமடைந்து சிறுபான்மை மக்களின் வாக்குகளே இரண்டு போட்டித் தரப்புகளுக்கும் இடையிலான வெற்றியைத் தீர்மானிக்கும் சக்தியாக அமையக்கூடும் என நம்பப்படுகிறது.

2010ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் சிறுபான்மையினரின் தயவின்றி, 75வீத வாக்குப்பலத்தைக் கொண்ட சிங்கள மக்கள், தமது சொந்த வாக்குகளாலேயே தாம் விரும்பிய ஆட்சியைத் தெரிவு செய்ய இயலும் என்ற நம்பிக்கையை வளர்த்திருந்தது. இந்தமுறை தமிழர் தரப்பு வாக்குகளே வெற்றியைத் தீர்மானிக்கும் என்ற அச்சம் சிங்கள மக்களுக்குத் தோன்று மாயின் சிறுபான்மைத் தமிழ்பேசும் மக்கள் எந்தப் பக்கம் சாய்கிறார்களோ அந்தப் பக்கத்துக்கு முழுமையான எதிர்ப்பக்கத்தில் அவர்கள் சாய்ந்து விடக் கூடிய ஆபத்து உருவாகும்.

எனவே, சிறுபான்மை இனத்தவர்கள் தமது துணையின்றி எந்த அரசும் ஆட்சியமைத்து விட முடியாது என்ற எண்ணத்தைக் கைவிட்டு– தமது குறிக்கோளை முன் நிறுத்தி அவதானத்துடன் செயற்பட வேண்டும். ஏனெனில், 2010 தேர்தலில் சிறுபான்மைக் கட்சிகள், பெரிய கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியுடன் கைகோர்த்து ஓரணியில் நின்று சரத் பொன்சேகாவை ஆதரித்தும் அவர் தோல்வியையே சந்திக்க நேர்ந்தது. ஏனெனில், இந்த நாட்டில் பேரினவாத தீவிர மேலாதிக்கமே மக்களை ஆக்கிரமித்து அடிமை யாக்கியிருந்தது. அதன் பின் விளைவாகவே, தமிழினத்தின் மேல் பெற்றுக் கொள்ளப்பட்ட போர் வெற்றி மாயை சிங்கள மக்களை ஆட்கொண்டிருந்தது.

ஆயினும், எதேச்சதிகார குடும்ப ஆட்சி முறை, சட்ட ஆட்சிச் சீர்குலைவு, நீதித்துறையின் முடக்கம், அதிகாரத் துஷ்பிரயோகம், வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு போன்றவை மக்களின் அன்றாட வாழ்க்கையை அவலத்துக்குள்ளாக்கி விட்டுள்ள இன்றைய நிலையில், போர் வெற்றிமாயை சிங்கள மக்களைவிட்டு கொஞ்சம் கொஞ்சமாக அகலத் தொடங்கியுள்ளது. அதன் பிரதிபலிப்பே ஊவா மாகாணத் தேர்தலில் அரசின் பின்னடைவு.

இந்தப்பின்னடைவிலிருந்தும், அச்ச நிலையிலிருந்தும் மேலெழ, மஹிந்த அரசு கையாள முனைகின்ற தந்திரோபாயம், மீண்டும் புலிப்பூச்சாண்டியும், தமிழீழக் கோரிக்கையும் சிங்கள மக்களுக்கு எதிரான சதி எனப் பரப்புரை செய்வதாகும். இச்சதியிலிருந்து பௌத்த – சிங்கள தேசத்தை மீட்க வேண்டுமாயின், புலி கள் மீளெழு வதைத் தடுக்கவேண்டும்; வடக்கு, கிழக்கில் இராணுவம் நிரந்தரமாக நிலைபெற வேண்டும்; தமிழர் தாயகம் என்ற சிந்தனை அடியோடு அழிக்கப்பட வேண்டும். மக்களின் பலம் தங்களின்பின்னே திரள வேண்டும் என்பதே அரசுத் தரப்பின் முழு மூச்சான பரப்புரையாக இந்தத் தேர்தலில் இருக்கப் போகின்றது.

தமிழ், முஸ்லிம் மக்கள், அரசின் இந்தப் பிரசாரத்துக்குப் பலம் சேர்க்கும் வகையில் எதிரணியின் பொதுவேட்பாளருக்கு வெளிப்படையான ஆதரவு வழங்கப்போகிறார்களா என்பதுதான் எம் மத்தியில் உள்ள பிரதான கேள்வியாகும். ஏனெனில். சிறுபான்மையினங்கள் எதிரணி வேட்பாளருக்கு ஆதரவு வழங்கப் போகிறார்கள் என்பது உறுதியாகுமானால், எதிரணி இவர்களுடன் நாட்டைப் பிரித்துக் கொடுக்கும் இரகசிய ஒப்பந்தம் செய்துவிட்டதுஎன்ற அரசின் பரப் புரை உச்சம் பெறும்.

மாறாக, ராஜபக்ஷவுக்கு சிறுபான்மைக் கட்சிகளின் ஆதரவு கிடைக்குமானால், எதிரணியின் பிரசாரம் வேறு விதமாக அமையும். மேலும் ஒரு 6 வருட பதவிக் காலத்துக்கு ஆசைப்பட்டு சிங்களவர்களையும் நாட்டையும் ராஜபக்ஷ காட்டிக்கொடுத்துவிட்டார் என்றும், தமது பக்கமுள்ள சரத் பொன்சேகாவும் படைத்தரப்பினரும் தமது உயிரைப் பணயம் வைத்துப் பெற்ற வெற்றியை – தமது அதிகாரத்தைத் தக்க வைப்பதற்காக மஹிந்த பணயம் வைத்துவிட்டார். அதற்கான இரகசிய ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டதெனவும் ரணில் விக்கிரமசிங்க – சந்திரிகா தரப்பு பரப்புரை செய்யும்.

விடுதலைப் புலிகளது ஆயுதப் போராட்டத்தில் இருந்து தமிழர்களைத் திசை திருப்ப 2000ஆம் ஆண்டில் சந்திரிகா ஜனாதிபதியாக ஆட்சியிலிருந்தபோது கவர்ச்சிகரமான பிராந்தியங்களின் ஒன்றியம் என்ற ஒரு தீர்வுப்பொதியைப் புதிய அரசமைப்பாக நாடாளுமன்றத்தில் முன்வைத்தார். ரணில் விக்கிர மசிங்கவும் ஐக் கிய தேசியக் கட்சியுமே நாடாளுமன்றத்தில் அந்த யாப்பை நிறைவேற்ற முடியாமல் செய்தன.

இதே ஐக்கிய தேசியக் கட்சி தான் முன்னர் பண்டா – செல்வா ஒப்பந்தத்தையும் கிழித்தெறிய வைப்பித்தது. அதேபோல, ரணில் விக்கிரமசிங்கவும் 2002இல் சமாதான போர் நிறுத்த உடன்படிக்கையை புலிகளுடன் செய்து சர்வதேச மட்டப் பேச்சு என்று 3 வருடங்களாக இழுத்தடித்தார். அதேவேளை கருணாவை புலிகளிடமிருந்து பிரித்தெடுக்கும்வேலையையும் செய்தார் என்று அவரே பெருமை யடித்துக் கொண்டதையும் நாம் கருத்தில் எடுக்கவேண்டும். எனினும், புலிகளும் ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைத்தபோது அரசின் 3 முக்கிய அமைச்சர்களைப் பறித்தெடுத்து சமாதானத்தை சந்திரிகா குழப்பினார். ஆக இரண்டு பெரிய சிங்களக் கட்சிகளுமே தமிழர்களுக் கான தீர்வு வழங்கு வதை ஏற்றுக் கொள்ளவில்லை என்பது தெளிவு.

இந்தக்கட்சிகள் இரண்டும் கடந்த காலங்களில் எப்படிச் செயற்பட்டிருந்தாலும் தமிழ் மக்கள் தமது மோசமான எதிரி ஒருவரை, இனம் கண்டு தோற்கடிக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது. இதற்குத் தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றுபடவேண்டும்.

நித்திய சுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 196 மருத்துவம்

# மூச்சிழுக்கும் ஒரு குழந்தை (A WHEEZING CHILD)



மூச்சிழுப்பு என்பது உயர் சுருதியுடனான விசில் ஊதுவது போன்ற சுவாசச் சத்தமாகும். சுவாசத் தொகுதியின் சிறு சுவாசக் குழாய்களின் சுருக்கத்தால் மூச்சிழுப்பு ஏற்படுகிறது. இது ஒரு பொதுவான சுவாசத் தொகுதி சம்பந்தப்பட்ட அறிகுறியாகும். இருபத்தைந்து தொடக்கம் முப்பது சதவீதமான ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைகள் எப்போதாவது ஒரு முறை மூச்சிழுப்பால் அவதிப்பட்டிருக்கலாம். அதேபோல் ஆறு வயதுக்குட்பட்ட சிறார்களில் அரைவாசிப் பேருக்கு ஒரு தடவையாவது மூச்சிழுப்பு ஏற்படலாம்.

**மூச்சிழுப்புக்கான காரணங்கள் எவை?**

1. மூச்சிழுப்புக்கான மிகப் பொதுவான காரணியாக சுவாசத் தொகுதியில் ஏற்படும் கிருமித் தொற்றுக்களே அமைகின்றன. அவற்றிலும் வைரசு கிருமித் தொற்றுக்களே பொதுவானவை. குழந்தை ஒன்றுக்கு மெல்லிய காய்ச்சலுடன் இருமல், மூச்சிழுப்பு என்பன ஏற்பட பொதுவாக வைரசுக்களே காரணமாகும். சில சமயங்களில் காய்ச்சல் மாறிய பின்னரும் இருமல், மூச்சிழுப்பு சில நாள்களுக்கு நீடிக்கலாம். இதை வைரசினால் தூண்டப்படும் (VIRAL INDUCED WHEEGING) என அழைப்பர். இதை விட சில சமயங்களில் கடுங் காய்ச்சலுடன் கூடிய நியூமோனியா போன்ற பக்ரீறியா தொற்றுக்களின் போதும் மூச்சிழுப்பு ஏற்படலாம்.
2. மூச்சிழுப்பு ஏற்படுவதற்கான அடுத்த பிரதான காரணியாக ஆஸ்துமா (ASTHMA) எனப்படும் முட்டு வருத்தம் அமைகின்றது ஒருபிள்ளைக்கு அடிக்கடி இருமலும், மூச்சிழுப்பும் ஏற்படும் போது அந்தக் குழந்தைக்கு ஆஸ்துமா உள்ளதா எனத் தீர்மானிக்க வேண்டும்.
3. சில வேளைகளில் சில வகையான உணவுகளுக்கு மருந்துகளுக்கு அல்லது இரசாயனப் பதார்த்தங்களுக்கு ஒவ்வாமை (ALLERGY) ஏற்படும் போதும் மூச்சிழுப்பு ஏற்படலாம்.
4. வீட்டினுள்ளே காணப்படும் சமையலறைப் புகை, சிகரட் புகை, தூசி போன்றவற்றால் காற்று மாசடைவதால் சிறுவர்களுக்கு மூச்சிழுப்பு, இருமல் என்பன ஏற்படலாம்.
5. சிறு பிள்ளைகள் பிற பொருள்களை வாயில் வைத்துக் கடிக்கும் போதோ அல்லது உட்கொள்ளும் போதோ புரையறி, பிறபொருள்கள் (FOREIGN BODY) சுவாசப் பாதையை அடைத்தாலும் மூச்சிழுப்பும் மூச்சுத் திணறலும் ஏற்படலாம்.
6. அரிதாக, சுவாசக் குழாய்களில் ஏற்படும் பிறவிக்குறைபாடுகளினால் குழந்தைக்கு பிறந்ததிலிருந்தே மூச்சிழுப்பு ஏற்படலாம்.

**மூச்சிழுப்பு உள்ளபோது நாம் அவதானிக்க வேண்டியவை எவை?**

பொதுவாக அவதானிக்க வேண்டியது எதுவெனில் குழந்தையொன்றின் ஆரோக்கிய நிலையாகும். ஒரு குழந்தை, பாலருந்தாது, உணவு உட்கொள்ளாது சோர்வடைந்து, மூச்சுவிடுவதில் சிரமப்படின் அது ஆபத்தானது. அந்தச்சந்தர்ப்பத்தில் உடனடி வைத்தியசிகிச்சை தேவையாகும். மேலும் மூச்சிழுப்பு ஏற்படும் போது அது ஏன் ஏற்பட்டுள்ளது எனவும் அவதானிக்க வேண்டும். உதாரணமாக திடீரென ஒரு குழந்தைக்கு இருமலும், மூச்சுத் திணறலும், மூச்சிழுப்பும் ஏற்படுமாயின் அது எதையாவது விழுங்கியதால் புரையேறியுள்ளதா எனப் பார்க்க வேண்டும். அவ்வாறே தோலில் கடியுடனான தடிப்புக்கள் ஏற்பட்டு மூச்சிழுப்பு ஏற்படுமாயின் ஏதோவொன்றுக்கு ஒவ்வாமை ஏற்பட்டுள்ளதா எனப் பார்க்க வேண்டும். காய்ச்சலுடன் இருமல், மூச்சிழுப்பு, மூச்சு விடச் சிரமப்படல் ஏற்படும் போது கிருமித் தொற்று ஏற்பட்டுள்ளது என அனுமானிக்கலாம்.

**மூச்சிழுப்பு உள்ளபோது என்ன செய்ய வேண்டும்?**

மேலே குறிப்பிட்டவை போன்ற ஆபத்தான அறிகுறிகள் காணப்பட்டால் உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல வேண்டும். சில சமயங்களில் பிறபொருள்களை விழுங்கி புரையேறியதால் மூச்சிழுப்பு ஏற்பட்டிருக்குமாயின் அதற்கான முதலுதவியைச் செய்யலாம்.

ஆஸ்துமாவினால் மூச்சிழுப்பு ஏற்படுமாயின் வைத்திய ஆலோசனைப்படி அதற்கான மருந்துகளைப் பாவிக்கலாம். உதாரணமாக அடிக்கடி முட்டு வருபவர்களுக்கு ஏற்கனவே தரப்பட்ட உள்ளிழுக்கும் மருந்து பம்பிகளை (INHALERS) முறையான விதத்தில் பாவிக்க வேண்டும்.

ஒவ்வாமையினால் மூச்சிழுப்பு ஏற்பட்டிருப்பின், ஒவ்வாமைக்கான காரணியை கண்டறிந்து தவிர்ப்பதுடன் (உதாரணம்: சில மருந்துவகைகள்) உடனடியாக வைத்திய சிகிச்சையைப் பெற வேண்டும்.

சுவாசக் கிருமித் தொற்றுக்களினால் மூச்சிழுப்பு ஏற்படும் போது குழந்தையின் ஆரோக்கிய நிலையை அவதானிப்பதுடன், தகுந்த சிகிச்சையையும் பெற வேண்டும்.

**மூச்சிழுப்பு ஏற்படாமல் எவ்வாறு தவிர்க்கலாம்?**

முதலில் மூச்சிழுப்புக்கான காரணியைக் கண்டறிந்து அதனைத் தவிர்க்க வேண்டும். கிருமித் தொற்றுக்களால் மூச்சிழுப்பு ஏற்படுமாயின் சுவாசத் தொற்றுக்கள் ஒருவரிலிருந்து இன்னொருவருக்கு பரவாமலிருப்பதற்கான நியம பாதுகாப்பு முறைகளைப் பின்பற்ற வேண்டும். முக்கியமாக தும்மும் போதும் இருமும் போதும் கைக்குட்டையை அல்லது திசுத்தாளைப் பயன்படுத்துவதுடன், நன்றாக கைகளை கழுவுதலும் வேண்டும். அதேபோல் ஒவ்வாமைக்கான காரணிகளை எதிர்காலங்களில் தவிர்த்தல் வேண்டும். சிறுபிள்ளைகள் பிறபொருள்களை உட்கொண்டு புரையேறிவிடாமல் பெற்றோர் அவதானத்துடன் பார்த்துக் கொள்ள வேண்டும். உதாரணமாக சின்னஞ்சிறு பாகங்களைக் கொண்ட விளையாட்டுப் பொருள்களை சிறு பிள்ளைகளுக்கு விளையாடக் கொடுக்கக் கூடாது.

ஆஸ்துமா நோயுள்ள பிள்ளைகளுக்கு அது ஏற்படுவதற்கான காரணிகளை கண்டறிந்து இயன்றவரை அவற்றிலிருந்து பாதுகாக்க வேண்டும். உதாரணமாக சிகரெட் புகை, சமையலறைப் புகை, தூசி என்பவை. அதேபோல் குழந்தை உறங்கும் அறையில் தூசி இன்றி படுக்கை விரிப்புக்கள், மெத்தை, ஆடைகள், தூய்மையாக இருத்தல் வேண்டும். வீட்டினுள்ளே செல்லப் பிராணிகளை விடக் கூடாது. ஒவ்வாமை உண்டுபண்ணக்கூடிய பதார்த்தங்களைத் தவிர்த்தல் வேண்டும். மூச்சிழுப்பு மீண்டும் மீண்டும் வராமலிருக்க பாவிக்கும் உள்ளிழுக்கும் மருந்துப் பம்பிகளை முறையான விதத்தில் பாவித்தல் வேண்டும். வைத்திய ஆலோசனைகளை முறைப்படி பின்பற்ற வேண்டும்.

இறுதியாக, மூச்சிழுப்பு என்பது சுவாசம் சம்பந்தப்பட்ட ஓர் அறிகுறியாக அமைவதுடன் அதற்கான பல காரணங்கள் உண்டு என அறியலாம். அக்காரணிகளைத் தவிர்ப்பதன் மூலம் மூச்சிழுப்பு பிள்ளைகளுக்கு ஏற்படுவதைத் தவிர்க்கலாம். மேலும் மூச்சிழுப்பு உள்ள போது ஆபத்துக்குரிய மற்றைய அறிகுறிகளை அவதானித்து உடனடிச் சிகிச்சையை பெறவும் வேண்டும்.

● மருத்துவர்
ந.ஸ்ரீசரவணபவானந்தன்,
குழந்தை நல வைத்திய
நிபுணர், யாழ். போதனா
வைத்தியசாலை.

# தற்கொலை-வன்முறைகள் குறைக்கப்படக் கூடியவை?

"Frustration is the root of aggression (விரக்தி வன்முறையின் ஆணிவேராகும்) இது ஓர் உளவியல் ஆய்வின் முடிவாகும். வன்முறையென்பது தனக்கெதிராக (Attempted suicide or Self harming) அல்லது பிறருக்கெதிராக மேற்கொள்ளப்படுவது அல்லது இரண்டுமாகக் காணப்படலாம். எமது தமிழ்ச் சமூகத்தில் அண்மைக் காலங்களில் வன்முறைகள் மிகவும் அதிகரிப்படைந்து காணப்படுகின்றன. வன்முறைகள் ஒரு நச்சு வட்டமாக (Vicious cycle) தொழிற்படுகின்றது. அதாவது வன்முறையால் வீரக்தி நிலை அதிகரிக்கும், இதனால் மீண்டும் வன்முறை தொடரும். எனவே அந்த நஞ்சு வட்டமானது பல்வேறு படிகளில் உடைக்கப்பட்டு நலமான ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்ப வேண்டியது எமது மக்களின் உடனடித்தேவையும்பொறுப்புமாகவுள்ளது.

வன்முறையின் சாட்சிகளாக சமூகத்தில் அதிகரித்துக் காணப்படும் தற்கொலை முயற்சிகள், மது-போதைப் பொருள் பாவனை, பாலியல் துஷ்பிரயோகம், சிறுவர் துஷ்பிரயோகம், குடும்ப வன்முறைகள், மண முறிவுகள், அதிகரித்த மனநோயாளிகளின் எண்ணிக்கை, ஏமாற்றுதல், கொள்ளைகள், சண்டைகள், கொலைகள் என எமது பார்வையில் நாளாந்த நிகழ்வுகளாகி விட்டன.

தற்கொலை முயற்சி மேற்கொண்டவர்களிடத்தில் பருத்தித்துறை தள வைத்தியசாலை உளநலப்பிரிவினரால் 2011இல் ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டது. அதிலிருந்து பின்வரும் விடயங்கள் அறியப் பட்டன. தற்கொலை முயற்சியில் ஈடுபட்டோரில் 95வீதத்தினரின் கல்வியறிவு க.பொ.த.சாதாரண தர மட்டத்திலேயே காணப்பட்டது. உயர் வீதங்கள் 16-23 வயதுகளிலும் 35-45 வயதுகளிலும் காணப்பட்டது. 16-23 வயதினரிடையே உறவுச் சிக்கல்கள் (பெற்றோர்-பிள்ளைகளுக்கிடையிலான முரண்பாடு), பரீட்சைநெருக்கடி நிலை; காதல் தோல்விகள் போன்ற காரணிகள் செல்வாக்குச் செலுத்தின. 35-45 வயதினரிடையே காரணிக்ளாக மது பாவனை, கணவன் மனைவி இடையேயான முரண்பாடுகள், குடும்ப வன்முன்ற, பொருளாதார நெருக்கடிகள், மண முறிவுகள் என்பன அமைந்திருந்தன. இதைவிட அண்மைக் காலமாக திட்டமிடப்படாத முறையில் அமைந்த கடன் சுமைகள் (loan/lease) என்பன காரணிகளாகக் காணப்பட்டன.

இவ்வாறான காரணிகளின் தாக்கத்தைக் குறைக்குமுகமான சமூகத்தினை உருவாக்குதல் ஆரோக்கியமான செயற்பாடுகளில் ஒன்றாகும். மனிதர்கள் விரக்தி நிலையடைதலைக் குறைக்க எல்லோருக்கும் வேலையும் பொறுப்பும் என்னும் கருப் பொருளில் அவரவர் தகைமை திறமைக்கேற்ப வாய்ப்புகள் பகிர்ந்தளிக்கப்படல், சேவைகளின் தரத்தை மேம்படுத்துதல், தேவையான செயற்றிட்டங்களை செயற்படுத்துதலில் இறுக்கமகாவிருத்தல், தேவையற்ற, பொருத்தமற்ற செயற்றிட்டங்களைத் தடை செய்தல், மட்டுப்படுத்தப்பட்ட கட்டுப்பாட்டுடன் கூடிய செயற்பாடுகளைக் கடைப் பிடித்தல் என்பன முக்கியமானவையாகும்.

இதைவிட மனித நெருக்கடியான வாழ்க்கைக் காலப் பருவங்கள்–பொதுப் பரீட்சைகள்–பெறுபேறுகள் வரும் பொழுது, காதல், திருமணக் காலப் பகுதிகள், குடும்பத்தில் அடிக்கடி சண்டைகள் வருகின்ற பொழுது, வேலை வாய்ப்பின்மை, பெரிய அளவிலான தொழில் நட்டங்கள் ஏற்படும் பொழுது, வாழும் சமூகத்துக்கு ஏற்பட்ட விலகல் நடத்தைகளில் ஈடுபடும் பொழுது, மது போதைப் பொருள் பாவனைக்கு உட்படும் போது, அல்லது தமது பணிகளை நேர்த்தியாகச் செய்ய முடியாமல் தலையிடி, உடல் வருத்தம் அடையும் போது, இவர்களுடன் கூட இருப்பவர்கள் (குடும்ப உறுப்பினர், கூடப் படிப்பவர்கள், நண்பர்கள், கூட வேலை செய்பவர்கள், அயலவர்கள், ஊர்ப்பெரியோர்) ஒருத்தருக்கொருத்தர் நெறிப்படுத்துநர்களாகவும், ஆதரவாளர்களாகவும் செயற்படுவதன்மூலம் விரக்தி நிலையடைதலைக் குறைக்க முடியும்.

(மிகுதி அடுத்த வாரம்)

# பதிவுகள்





யாழ். தட்டாதெரு கலாஜோதி இளைஞர் ஒன்றியத்தால் நடத்தப்பட்ட சிறப்பு நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட அ.அருள்நாதனை ஒன்றியத்தின் விளையாட்டுப் பகுதித் தலைவர் ப.சக்திவேல் மாலை அணிவித்து வரவேற்பதையும் பிரதம விருந்தினர் கலைஞரும், பாடகருமான கதிர் சுந்தரலிங்கத்துக்குப் பொன்னாடை போர்த்து கௌரவிப்பதையும், பிரதம விருந்தினர் கரப்பந்தாட்ட மைதானத்தை திறந்து வைப்பதையும் அங்கு அருகில் ஒன்றியத் தலைவர் இரத்தினசிங்கம் இராகுலன் நிற்பதையும் இறுதியாக கலைஞர்கள் பக்தி இசை

முல்லைத்தீவு சிலாவத்தை தமிழ் மகா வித்தியாலயத்தில் கு.சண்முகநாதன் எழுதிய கல்வி மெய்யியல் நூல் அண்மையில் வெளியிடப்பட்டது. சிறப்புப் பிரதியை பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ஆசிரிய வாண்மை விருத்தி நிறுவகப் பணிப்பாளர் பா.தனபாலனிடமிருந்து ஆசிரிய ஆலோசகர் எஸ். சிவாகரன் பெற்றுக்கொள்வதையும் இந்த நிகழ்வில் கலந்து கொண்ட ஆசிரியர்களுக்கு நூல் வழங்கப்படுவதையும் காணலாம். (ஒ-29)







கோண்டாவில் ஞானவீர சனசமூக நிலையத்தால் அண்மையில் மண்சரிவால் பாதிக்கப்பட்ட மலையக மக்களுக்காக சேகரிக்கப்பட்ட ஒரு தொகைப் பொருள்கள் யாழ். பல்கலைக்கழக விவசாயபீட மாணவர் ஒன்றியத்திடம் அண்மையில் ஒப்படைக்கப்பட்ட போது... (ஒ)




வட்டு.வடக்கு, சித்தன்கேணி பிளவத்தை அ.மி.த.க.பாடசாலையின் வருடாந்தப் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றபோது கலந்து கொண்ட விருந்தினர்கள் மத்தியில் பாடசாலை அதிபர் உரையாற்றுவதையும், விழாவில் இடம்பெற்ற கலை நிகழ்வு ஒன்றையும் காணலாம். (ஒ)




கவிஞர் இராசையா குகதாசன்– புவனேஸ்வரி குகதாசன் தம்பதிகளின் மணி விழா அண்மையில் யாழ். சைவபரிபாலன சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்றபோது கே.எஸ்.ஆர். திருஞானசம்பந்தன், க.சித்திரா குழுவினரின் பக்கவாத்தியங்கள் சகிதம் தேவாரப் பண்ணிசைக் கச்சேரி செய்வதைக் காணலாம். (ஒ)




யாழ். கல்வி வலய உளநலப் பிரிவினரால் உலக உளநல தினத்தையொட்டி 'மனத்தெளிவு' என்ற நூல் அண்மையில் யாழ். இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் வெளியீட்டு வைக்கப்பட்டது. இந்த நிகழ்வுக்கு தலைமை வகித்த பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ.அருணகிரிநாதன், பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ். மாணிக்கராசா, கலாநிதி ரி.எஸ். யோசுவா அடிகளார் ஆகியோர் அமர்ந்திருப்பதையும், நூல் ஆசிரியரும் உளநல ஆசிரிய ஆலோசகருமாகிய எ.ஜெ.புத்திசிகாமணி ஏற்புரை வழங்குவதையும், இந்த நிகழ்வின் பிரதம விருந்தினரான மருத்துவர் ஆர்.கணேசமூர்த்தி உரையாற்றுவதையும் ஏனைய விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் உளநல மருத்துவ நிபுணர் எஸ். சிவயோகன் உரையாற்றுவதையும் மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் எஸ்.ராதாகிருஷ்ணனும் ஏனைய விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் காணலாம். (ஒ)

# சனி பெயர்ச்சி உங்களுக்கு எப்படி? 02.11.2014 - 2017



## 27 நட்சத்திரங்கள், 12 ராசிகளுக்குமான பலன்களும் பரிகாரங்களும்

### கும்பம்



***கும்பராசி நேயர்களே!***

நீண்ட ஆயுளைப் பெற்றவர்கள். உருவ அமைப்பில் புருவங்கள் அழகாக வளைந்து, நெற்றி நடுப்பக்கம் சாய்ந்து, உதடுகள் மூடியும், மூக்கு அகன்றும் காணப்படுவர். எப்பொழுதும் முகத்தில் புன்சிரிப்போடு சரளமாகப் பேசும் குணமுடையவர்களாக இருப்பார்கள். கழுத்து சிறுத்தும், பற்கள் உறுதியற்றும் இருக்கும். விரல்கள் கூர்மையாகவும், கைகளுக்கேற்றவாறு அமைந்திருக்கும். இவர்கள் உடுக்கும் உடை, உண்ணும் உணவு எல்லாமே மற்றவர்களுக்கு வினோதமானதாக இருக்கும் என்றாலும் ஆத்ம பலமும், மனோதிடமும் கொண்டிருப்பார்கள். அன்பும், சாந்தமும், அமைதியான தோற்றமும் கொண்ட கும்ப ராசிக்காரர்கள் நியாய அநியாயங்களை பயமின்றி எடுத்துரைப்பார்கள். சொன்ன சொல் தவறாத இவர்கள் முரட்டுப் பிடிவாதக்காரர்கள். மனதை ஒரே நிலையில் கட்டுப்படுத்தக்கூடிய மனப்பக்குவம் கொண்டவர்கள். தனக்குப் பிடித்தவர்களிடம் நெருங்கிப் பழகும் இவர்கள் பிடிக்காதவர்களை ஏறெடுத்தும் பார்க்க மாட்டார்கள். எவ்வளவு பெரிய பெயர், புகழ், கௌரவம், அந்தஸ்து இருந்தாலும் பிடிக்கவில்லை என்றால் துச்சமாக நினைத்து அவற்றைத் தூக்கி எறிவார்கள். உண்மை பேசுவதையே குறிக்கோளாகக்கொண்ட இவர்களின் பேச்சுக்கு எந்த இடத்திலும் மதிப்பிருக்கும். தவறு செய்பவர்களைத் தயவு தாட்சண்யம் பாராமல் கண்டிப்பார்கள். தன்னிடம் பழகுபவர்களை துல்லியமாக எடைபோடுவதில் சாமர்த்தியசாலிகள். பரந்த நோக்கம் கொண்டவர்களாத லால் தம்முடைய சொந்தப் பொருள்களையும் பிறருக்கும் தானமளிக்க தயங்க மாட்டார்கள். மற்றவர்களை எளிதில் திருத்தக்கூடிய ஆற்றல் மிக்கவர்கள். பிறர் வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சினைகளில் தேவையின்றித் தலையிடாத நியாயவாதிகளாக இருப்பார்கள். எந்தக் காரியத்தையும் எளிதில் செய்து முடிப்பார்கள்.

கடந்த இரண்டரை வருடகாலமாக சனி பகவான் உமது ராசிக்கு பாக்ய ஸ்தானமான 9இல் இருந்தார். முதலீடு பெருகின. வண்டி, வாகனம் சேர்ந்தன. அறக்கட்டளை அமைத்து தான தர்மம் செய்ய முடிந்தது. தந்தையின் உடல் நலனில் கவனம் செலுத்த நேர்ந்தது. 2.11.2014 இல் சனி பகவான் உமது ராசிக்கு 10 இல் வந்துள்ளதால் வாக்கினால் ஜீவனம் புரிவோர் மேன்மை அடைவர். சனி பகவான் உமது ராசிக்கு விரயாதிபதியும் ஆவதால் வரவும் செலவும் சமமாக இருக்கும். உமது விரய ஸ்தானத்துக்கு குரு பார்வை இருப்பதால் சுப செலவுகளே தொடரும். 26.01.2017 வரை 10 இல் சஞ்சரிப்பார்.

சனி பகவானின் 3, 7, 10 பார்வையினால் உமது ராசிக்கு 12, 4,7 ஆகிய வீடுகளைப் பார்வை செய்வார்.

சனி பகவான் உமது ராசிக்கு 12 ஆவது வீட்டைப் பார்வை செய்வதால் சுப செலவுகள் வரும். தொழில் வழிப் பயணங்கள் உண்டாகும். வாக்குறுதி அளித்த வகையிலோ பிணைக் கையெழுத்து போட்ட வகையிலோ எதிர்பாராத செலவுகள் வரும். பணம் கையாள்வதில் கவனம் தேவை. அகால உறக்கம், அகால போசனம் தவிர்க்கவும்.

சனி பகவான் பார்வை 4 ஆம் வீட்டில் பதிவதால் வீடு, கார், கால்நடை ஜீவராசிகள் வாங்க நிதியுதவி கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் கூடுதல் கவனம் செலுத்தவும். நல்ல பணியாள்கள் அமைய இடமுண்டு. போக்குவரத்து மூலம் தொழில் வளம் பெறுவோர் ஏற்றமடைவர். வாடகைக் கார், தவணைவசூலிப்பு போன்ற பணியினர் ஏற்றமடைவர். வாகனம் ஓட்டும் போது சாலை விதிகளை மதித்து நடப்பது நன்று. சனி பகவானின் பார்வை உமது ராசிக்கு 7 இல் பதிவதால் கணவன் மனைவிக்கு இடையில் தென்றலும் புயலும் மாறிமாறி வீசும். இதனால் ஒருவரை ஒருவர் அனுசரித்துப் போவது நலம். கூட்டுத் தொழிலில் கூடுதல் கவனம் தேவை. உமது மகனோ மகளோ கல்வியில் முன்னிலை பெறுவர். பணியில் பாராட்டுப் பெறுவர். சனியின் ஸ்தான பலன் பிரதானமானது. எனவே தொட்டது துலங்கும். 13.07.2015 வரை குரு பகவான் உமது ராசிக்கு 6 இலிருப்பதால் வாய்மொழிக் கடன் தீரும். *(10ஆம் பக்கம் பார்க்க)*

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | | | 9 | | 6 | | | 1 |
| 4 | | 2 | 5 | | | | | |
| 6 | 7 | | 8 | | 3 | 9 | | |
| 1 | 3 | | 4 | | | 7 | | |
| | 6 | | | 3 | | | 1 | |
| | | 5 | | | 8 | | 3 | 6 |
| | | 7 | 3 | | 9 | | 4 | 5 |
| | | | | | 2 | 1 | | 9 |
| 8 | | | 6 | | 4 | | | 7 |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 7 | 5 | 2 | 1 | 3 | 6 | 8 | 4 |
| 3 | 8 | 1 | 5 | 4 | 6 | 7 | 2 | 9 |
| 6 | 4 | 2 | 9 | 7 | 8 | 3 | 5 | 1 |
| 4 | 1 | 8 | 3 | 2 | 7 | 5 | 9 | 6 |
| 7 | 5 | 6 | 4 | 9 | 1 | 2 | 3 | 8 |
| 2 | 9 | 3 | 8 | 6 | 5 | 4 | 1 | 7 |
| 5 | 6 | 7 | 1 | 8 | 2 | 9 | 4 | 3 |
| 1 | 2 | 4 | 7 | 3 | 9 | 8 | 6 | 5 |
| 8 | 3 | 9 | 6 | 5 | 4 | 1 | 7 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங் கள், பகுதி கள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக் கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# நாளை

இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வைத்யா

**கார்த்திகை-22 திங்கட்கிழமை 08.12.2014**

திதி: துதியை மு.இ.07.06வரை | சுபநேரம்:12.17-01.47 வரை

நட்சத்திரம்: திருவாதிரை பி.இ.02.33 வரை | இராகுகாலம்: 07.47-09.17

**மேடம்**: புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள். இழுபறியாக இருந்த வேலைகள் முடியும். நீண்ட நாள் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பீர்கள். உத்தியோகத்தில் உங்கள் உழைப்புக்கு அங்கீகாரம் கிடைக்கும்.

**இடபம்**: நினைத்த வேகத்தில் சில வேலைகளை முடிக்க முடியாமல் தடை, தாமதங்கள் ஏற்படும். வெளுத்ததெல்லாம் பாலாக நினைத்து சிலரிடம் பேசி சிக்கிக் கொள்ளாதீர்கள். சிறுசிறு அவமானம் ஏற்படக்கூடும்.

**மிதுனம்**: ஒன்றுக்கும் மேற்பட்ட வேலைகளை இழுத்துப் போட்டுப் பார்க்கக் கூடும். அயலார் சிலரின் செயற்பாடுகளால் கோபம் அடையலாம். உத்தியோகத்தில் மறதியால் பிரச்சினைகள் ஏற்படும்.

**கடகம்**: ராஜதந்திரமாக செயற்பட்டு சில காரியம் முடிப்பீர்கள். உங்களால் பயனடைந்தவர்கள் இப்போது உங்களுக்கு உதவி செய்வார்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளால் பாராட்டப்படுவீர்கள்.

**சிங்கம்**: உங்கள் பிடிவாதப்போக்கை ஓரளவு மாற்றிக் கொள்வீர்கள். உங்களால் வளர்ச்சியடைந்த சிலரை இப்பொழுது சந்திக்க நேரிடும். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும்.

**கன்னி**: விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். உறவினர்கள் உங்களைப் புரிந்து கொள்வார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் இருந்த பிரச்சினைகள் தீரும்.

**துலாம்**: அநாவசியமாக அடுத்தவர்கள் விவகாரத்தில் தலையிட வேண்டாம். தேவையற்ற விடயங்களை மனதில் நினைத்து குழம்பிக் கொண்டிருக்காதீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளால் அலைக்கழிக்கப் படுவீர்கள்.

**விருச்சிகம்**: சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். வியாபாரத்தில் வேலையாட்களின் ஆதரவு கிடைக் கும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

**தனுசு**: இதமான பேச்சால் எல்லோரையும் கவருவீர்கள். பழைய உறவினர், நண்பர்களுடன் மனம் விட்டுப்பேசி மகிழ்வீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் உதவுவார்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுக்கு பல ஆலோசனைகள் தருவீர்கள்.

**மகரம்**: மற்றவர்களை நம்பி எந்த வேலையையும் ஒப்படைக்கக் கூடாது என்று முடிவெடுப்பீர்கள். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். நட்பால் ஆதாயம் உண்டு. உத்தியோக்த்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும்.

**கும்பம்**: எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும், எதிர்பாராத ஒரு வேலை முடியும். தாயாருக்கு மருத்துவச் செலவுகள் ஏற்படும். வெளிவட்டாரத்தில் புதிய அனுபவம் உண்டாகும். அலுவலகத்தில் அமைதி நிலவும்.

**மீனம்**: தைரியமாகச் சில முக்கிய முடிவுகள் எடுப்பீர் கள். பிள்ளைகளால் புகழ், கௌரவம் உயரும். உத்தியோகத்தில் அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள்.

# செய்திகள்

## சுகாதாரத் தொண்டர்கள் 19 பேருக்கு சைக்கிள்கள்

தென்மராட்சி, டிசெ.7

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையில் கடமையாற்றும் 19 சுகாதாரத்தொண்டர்களுக்கு வேள்ட் விசன் நிறுவனத்தினரால் கடந்த புதன் கிழமை சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

பிரதேசத்தில் சுகாதார சேவைகளை மேம்படுத்தும் பொருட்டு சைக்கிள்கள் வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் க.தயாளன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் யாழ்.பிராந்திய தாய் சேய் நல பொறுப்பதிகாரி மருத்துவர் குமாரவேல், பொது சுகா தார தாதியர் சேவை உத்தி யோகத்தர், வேள்ட்விஷன் நிறுவன இணைப்பாளர் றொனால்ட் ஆகியோர் கலந்துகொண்டு தொண்டர்களுக்கு சைக்கிள்களை வழங்கி வைத்தனர். (வ-9)

## மாகாண மட்டத்தில் சாதனை

வவுனியா, டிசெ.7

வவுனியாவில் நடைபெற்ற மாகாணமட்ட விஞ்ஞானவினாடி வினாப்போட்டியில் யா/ அருணோதயக் கல்லூரியின் தரம் 6 மாணவன் மதிவதனன் லட்சிகன் முதலாம் இடத்தைப் பெற்றுச்சாதனை படைத்தார். அவர் ஹாட்லிக் கல்லூரி, யாழ் இந்துக்கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி, இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி போன்ற தேசிய பாடசாலை மாணவர்களுடன் மிக இறுக்கமான போட்டியைச் சந்தித்தே இந்த முதலிடத்தைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. அருணோதயக் கல்லூரி வரலாற்றில் இவரே முதலாவதாக மாகாண மட்ட விஞ்ஞான வினாடி வினாப் போட்டியில் முதலாம் இடம் பெற்றவர் என்ற வரலாற்றுப் பதிவையும் பெறுகின்றார். அவருக்கான வழிப்படுத்தலை விஞ்ஞான பாட ஆசிரியர் சுமந்திரன் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (வ-86)

## சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தால் தென்மராட்சி மாணவர் கௌரவிப்பு

தென்மராட்சி, டிசெ.7

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் தென்மராட்சி கல்வி வலயத்தில் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளிக்குமேல் புள்ளிகள் பெற்ற 194 சாதனையாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வை கடந்த செவ் வாய்க்கிழமை தென்மராட்சி கலாமன்ற மண்டபத்தில் நடத்தினர்.

சாதனையாளர்கள் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி வாசலிலிருந்து சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி பாண்ட் வாத்திய அணிகள் சகிதம் விழா மேடைக்கு ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர்.

கழகத்தலைவர் லயன் க.தர்சன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு முதன்மை விருந்தினர்களாக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார், சர்வதேச லயன்ஸ் கழக 306 பி1 மாவட்ட உதவி ஆளுநர் லயன் மருத்துவர் வீ.பீ.தியாகராசா ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி கோட்டக்கல்விப் பணிப்பாளர் கு.சிவானந்தம், சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் அ.கயிலாயபிள்ளை ஆகி யோரும்கலந்துகொண்டனர். (வ-9)

## மிருசுவில் நூலக வளாகத்தில் சிறுவர் பூங்கா

சாவகச்சேரி பிரதேச சபையின் மிருசுவில் பொது நூலக வளாகத்தில் சிறுவர் பூங்கா ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இதற்கான நிதியை ஒதுக்கித்தர வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் வாக்குறுதியளித்துள்ளார்.

கடந்த 19 ஆம் திகதி பொது நூலகத்தில் நடைபெற்ற தேசிய வாசிப்பு மாத இறுதி நாள் நிகழ்வில் வைத்தே அவர் இவ்வாறு வாக்குறுதி வழங்கியிருந்தார். (வ-9)

# நீர்வேலிச் சங்கம் யாழில் முன்னிலை

## கூட்டுறவு தின மதிப்பீட்டின் அடிப்படையில்

யாழ்ப்பாணம், டிசெ.7

92 ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு யாழ்.மாவட்டத்தில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிடையே நடத்தப்பட்ட மதிப்பீடுகளின் பிரகாரம் வலி.கிழக்கு தென்பகுதி, நீர்வேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் முன்னிலையில் உள்ளது.

சங்கங்கள்இடையேஇடம்பெறும் அதிகூடிய வியாபார நடவடிக்கைகள் மற்றும் செயற்பாடுகளின் பிரகாரம் இந்த சங்கம் மாவட்ட மட்டத்தில் முதலிடத்தில் இருப்பதாக கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே. அருந்தவநாதன் தெரிவித்தார்.

வீரசிங்கம் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற கூட்டுறவுச் சங்கங்களுக்கான மாதாந்த கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர், மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

மாவட்ட மட்டத்தில் சகல கூட்டுறவுச் சங்கங்கள் இடையே அதன் செயற்பாடுகள், வியாபார நடவடிக்கைகள் உட்பட அனைத்து மதிப்பீட்டுப் பணிகளையும் திணைக்களம் மேற்கொண்டது. இதன்படி வலி.கிழக்கு நீர்வேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் முன்னிலையில் திகழ்கின்றது. இரண்டாவதாகப் பண்டத்தரிப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கமும் மூன்றாவதாகத் தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமும் உள்ளன.

அத்துடன் வலய மட்டத்தில் மேற்கொண்ட மதிப்பீட்டின் பிரகாரம் தென்மராட்சி வலயத்தில் கொடிகாமம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமும், வடமராட்சி வலயத்தின் உடுப்பிட்டி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கமும், தீவக வலயத்தில் ஊர்காவற் றுறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமும் வலிகாமம் வலயத்தில் பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமும், வலி.கிழக்கு வலயத்தில் நீர்வேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கமும் முன்னிலையில் உள்ளன.

அதனைவிட அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், சதாவதானி கதிரவேற்பிள்ளை சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கம், காரைநகர் அம்பாள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், யாழ். மாவட்ட பார ஊர்த்தி உரிமையாளர் சங்கம், யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (யாழ்கோ), யாழ்.வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை கூட்டுறவுச் சங்கம், கரவெட்டி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் என்பனவும் முன்னிலையில் உள்ளன.

இரண்டாம் தர கூட்டுறவுச் சங்கங்களில் மேற்கொண்ட மதிப்பீடுகளின் பிரகாரம் வடமாகாண பனை தென்னை கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் முன்னிலையில் உள்ளது. மாவட்டத்தில் நடாத்தப்பட்ட மதிப்பீடுகளின் பிரகாரம் முன்னிலையில் திகழும் இந்த சங்கங்களுக்கு விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளது. (வ-17)



துணுக்காய் தென்னியங்குளம் காட்டுப் பகுதியில் களவாக மரம் வெட்டிய நபரொருவரை மல்லாவிப் பொலிசார் கைது செய்ததுடன் மரம் வெட்டுவதற்கு பயன்படுத்தப்படும் இயந்திரத்தையும் கைப் பற்றியுள்ளனர். கைதுசெய்யப்பட்ட நபர் முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டுப் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக மல்லாவிப் பொலிஸார் தெரிவித்தனர். (த-18)

## கடை உடைத்து பொருள்கள் திருட்டு



கொழும்புத்துறை, டிசெ.7

அடை மழையைப் பயன்படுத்தி பாண்டியன்தாழ்வுப் பகுதியில் உள்ள பலசரக்கு கடையை உடைத்து திருடர்கள் பெறுமதியான பொருள்களை அள்ளிச் சென்றுள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை இரவிரவாக மழை கொட்டிய வேளை கடையொன்றின் கூரையைப் பிரித்து உட்செல்ல முற்பட்ட திருடர்கள் அங்கு பாதுகாப்புக்காக அமைக்கப்பட்டிருந்த தலைகளைத் தாண்டி உட் செல்ல முடியாததால் முன்பக்க கதவை உடைத்து உட்சென்று திருட்டில் இறங்கினர்.

பால்மா வகைகள், சிகரெட் பிஸ்கட் மற்றும் ஏனைய பொருள்கள் உட்பட பெருமளவு பொருள்களை அவர்கள் திருடிச் சென்றுள்ளனர். இது தொடர்பில் யாழ்.பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

கடந்த சில வருடங்களாக மழை காலங்களில் இந்தப் பகுதியில் உள்ள கடைகள் இரவில் உடைத்து திருடப்பட்டு வருவது தொடர்வதாக வர்த்தகர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (வ-135)

## தவறி வீழ்ந்து இளைஞன் காயம்

மோட்டார் சைக்கிளைச் செலுத்தும் போது கண்ணயர்ந்த வவுனியா இளைஞர் தவறி வீழ்ந்து காயமடைந்தார். இந்தச் சம்பவம் கடந்த புதன்கிழமை சாவகச்சேரி பெரிய அரசடியில் இடம் பெற்றது.

காயங்களுக்கு இலக்கான வவுனியா நாவற்குளத்தைச் சேர்ந்த இராதா கிருஷ்ணன் ஸ்ரீ ஆனந்த கிருஷ்ணன் (வயது-21) என்பவர் சாவகச் சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிகசிகிச்சைக்காக யாழ்.போதனா மருத் துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

இவர் வவுனியாவிலிருந்து மோட்டார் சைக்கிளில் தனித்து வந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# வடமராட்சி பாடசாலைகளின் சிறந்த நூலகங்கள் தெரிவு

கரணவாய், டிசெ.7

தேசிய நூலக மாதத்தை முன்னிட்டு வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்ட சிறந்த நூலகங்களைத் தெரிவு செய்வதற்கான போட்டியில் 1 ஏ.பி பாடசாலைகளில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியும், 1 சி பாடசாலைகளில் வல்வை மகளிர் கல்லூரியும், தரம் 2 பாடசாலைகளில் வல்வைசிவகுரு வித்தியாலயமும் முதலாம் இடங்களைப் பெற்றுள்ளன.

நூலக வாரத்தை முன்னிட்டு பாடசாலைகளில் உள்ள நூலகங்களில் ஒழுங்கமைப்பு, நிர்வாக மயமாக்கல், அழகு படுத்தல் சிறந்த சேவை வழங்கல் உட்பட பல்வேறு விடயங்களை உள்ளடக்கி போட்டிகள் வடமராட்சி வலயப் பணிமனையால் நடத்தப்பட்டது.

இதில் 1 ஏ பி பாடசாலைகளில் சிறந்த பாடசாலைகளில் முதலாம் இடத்தை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியும் 2 ஆம் இடத்தை உடுப்பிட்டி மகளிர் கல்லூரியும் 3 ஆம் இடத்தை நெல்லியடிமத்தியகல்லூரியும் – 1 சி பாடசாலைகளில் வல்வை மகளிர் கல்லூரி முதலாம் இடத்தையும் புற்றளை மகா வித்தியாலயம் 2 ஆம் இடத்தையும் தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயம் 3 ஆம் இடத்தையும் பெற்றுக் கொண்டதுடன் –

தரம்2பாடசாலைகளில்வல்வை சிவகுரு வித்தியாலயம் முதலாம் இடத்தையும் கற்கோவளம் மெ.த.மி. பாடசாலை 2 ஆம் இடத்தையும் கரணவாய் மகாவித்தியாலயம் 3 ஆம் இடத்தையும்பெற்றுள்ளன. (வ-108)

# வன்முறைகளை தடுப்பதில் பெண்களுக்கும் அதிக பங்கு

## யாழ்.மாவட்ட தனியார் பஸ் சங்கத்தின் இணையத் தலைவர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், டிசெ.7

பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தனியாக ஆண்கள் மட்டும் காரணமல்ல. பெண்களும் அதற்குச் சாதகமான சூழலை உருவாக்குகின்றனர். எனவே வன்முறைகளைத் தவிர்ப்பதில் பெண்களுக்கும் அதிக பங்கு உள்ளது என்று யாழ்.மாவட்ட தனியார் பஸ் சங்கத்தின் இணை யத்தலைவர் பொ.கெங்காதரன் தெரிவித்தார்.

யாழ்.சமூக செயற்பாட்டு நிலையத்தின் ஏற்பாட்டில் பெண்கள் மீதான வன்முறைகளுக்கு எதிரான வாரத்தை முன்னிட்டு தனியார் பஸ்களின் சாரதிகள், நடத்துநர் களுக்கான விழிப்புணர்வு கருத் தரங்கு யாழ்.நாவலர் கலாசார மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது:

"தனியார் பஸ்களில் பெண்கள் மீதான வன்முறைச் சம்பவங்கள் ஏற்படும்போது சாரதியோ நடத்துநரோ அதனைத் தட்டிக் கேட்க முடியாத நிலையிலேயே உள்ளனர். மாறாக அவர்கள் தட்டிக் கேட்கும் போது அவர்களுக்கு பாதுகாப்பு இல்லாத நிலை உள்ளது.

எனினும் துணிச் சலான சாரதிகள், நடத்து நர்கள் முடிந்தளவுக்கு வன்முறைகளை மேற்கொள்வோரை பஸ்களில் இருந்து இறக்கிவிடவோ அல்லது பொலிஸ் நிலையங்களுக்கு கொண்டு செல்வதற்கோ தயங்குவது இல்லை. பொலிஸாருடைய பங்களிப்பு இருந்தால் இத்தகைய சம்பவங்களைக் கட்டுப்படுத்த முடியும்.

கடந்த காலங்களில் இரவு 12 மணிக்கும் பெண்பிள்ளைகள் துணிந்து வீதியில் செல்லக் கூடிய பாதுகாப்பு இருந்தது. ஆனால் இப்போது எவ்வாறான சூழலில் நாங்கள் இருக்கிறோம் என்பது எங்களுக்கே தெரியும். பகல் வேளைகளிலேயே பாதுகாப்பு இல்லாத நிலை. ஆகவே வன்முறைக்கு முழுமையாக ஆண்களை மட்டும் குற்றம் சாட்டமுடியாது. பெண்களுக்கும் அதில் பங்கு உள்ளது. தங்களுடைய பாதுகாப்பை அல்லது தங்கள் மீதான வன்முறைகளைத் தவிர்ப்பதில் அவர்கள் கவனமாக இருக்க வேண்டும்" என்றார்.

நிகழ்வில் கருத்துரை வழங்கிய யாழ்.சமூக செயற்பாட்டு மையத்தின் இணைப்பாளர் எஸ்.சுகிர்தராஜ் கருத்துத் தெரிவிக்கும் போது:

"கடந்த காலங்களுடன் ஒப் பிடுகையில் தற்காலத்தில் போர்ப் பாதிப்பால் பல்வேறு உரிமைகள் மீறப்பட்ட வண்ணமே உள்ளன. அழுத்தங்களுக்குள் அகப்பட்டு அவற்றில் இருந்து மீள முடியாத நிலையில் நாம் உள்ளோம். ஆனால் எமது பிரதேசத்தில் கலாசாரத்துக்கு முக்கித்துவம் கொடுக்கும்போது ஏன் பால்நிலையில் மட்டும் வேறுபாடு காட்டுகிறோம். பால்நிலை சமத்துவம் ஏன் வழங்கப்படவில்லை. பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றன. பஸ்களில் பயணங் களின்போது மேற்கொள்ளப்படும் வன்முறைகளுக்கு யார் பொறுப்பு என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்" என்று தெரிவித்தார். நிகழ்வில் சாவகச்சேரி மகளிர் அபி விருத்தி நிலைய உத்தியோகத்தர் பி.கமலலோஜினி, மற்றும் சாரதிகள், நடத்துநர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (வ–14)

# டெங்குக் கட்டுப்பாட்டு செயற்பாடுகள் தீவிரம்

## சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில்

தென்மராட்சி, டிசெ.7

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவினர் தமது விசேட டெங்கு கட்டுப்பாட்டுச் செயற்பாடுகளை தீவிரமான விதத்தில் முன்னெடுத்து வருகின்றனர்.

கடந்த 24 ஆம் திகதி தொடக்கம் சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவினரால் தென்மராட்சி பிரதேசத்தில் டெங்கின் தாக்கம் அதிகமாகக் காணப்படும் மட்டுவில், கொடிகாமம் ஆகிய பொது சுகாதார பரிசோதகர்கள் பிரிவுகளில் டெங்கு கட்டுப்பாட்டு பரிசோதனைகள் பொலிஸாருடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. குறித்த இரு பிரிவுகளிலும் கடந்த மாதம் இரு தடவைகள் டெங்குப் பரிசோதனைகள் செய்யப்பட்டபோது எச்சரிக்கை செய்யப்பட்டவர்களில் சிலர் அதனைச் செவிமடுக்காமல் செயற்பட்டு வந்துள்ளனர். இதனால் மட்டுவில் பிரதேசத்தில் கடந்த வாரம் டெங்கால் பாதிக்கப்பட்ட இருவர் இனங் காணப்பட்டு யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்தநிலையில் கடந்த 26 ஆம் திகதி மட்டுவில் வடக்கு , சரசாலை தெற்கு, சரசாலை வடக்கு ஆகிய இடங்களில் சுகாதாரப் பகுதியினரும் பொலிஸாரும் இணைந்து 300 இற்கும் மேற்பட்ட குடியிருப்புகளில் பரிசோதனைகள் மேற்கொண்டனர். அவற்றில் 6 குடியிருப்புக்களில் நாய், புறா, கோழி ஆகியவற்றுக்கு வைக்கப்பட்டிருந்த தண்ணீரில் டெங்கு நுளம்புக் குடம்பிகள் காணப்பட்டதால் இக் குடியிருப்பாளர்கள் மீது வழக் குத் தொடர பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

மட்டுவில் தெற்கு, கைதடி நுணாவில், சந்திரபுரம் ஆகிய இடங்களில் டெங்கு பரிசோதனை இடம் பெறவுள்ளதால் முறைப்படி செயற்படாதோருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படலாம் என்று தெரிவிக்கப்பட்டது. (வ–9)

# 30 வருடங்களாக திருத்தப்படாத வீதி



கிளிநொச்சி, டிசெ.7

முல்லைத்தீவு மாவட்டத்தின் மல்லாவி 3 ஆம் யூனிற் சந்தியிலிருந்து மாந்தை கிழக்கு எல்லை வரைக்குமான 3 கிலோ மீற்றல் நீளமான வீதி 30 வருட காலமாக எதுவித புனரமைப்பும் இன்றி சேதமடைந்து காணப்படுவதால் அதனைத் தினமும் பயன்படுத்துவோர் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

நீண்ட காலப் புனரமைப்பின்றி காணப்படும் குறித்த வீதி தற்போது குண்டும் குழியுமாக மிக மோசமான நிலையில் சேதமடைந்து காணப்படுவதாகவும் இதனால் அந்தப் பிரதேசத்திலுள்ள மக்கள் போக் குவரத்தை மேற்கொள்ள முடியாமல் பெரும் நெருக்கடியை எதிர்நோக்குவதாகக் கூறுகின்றனர்.

இதேவேளை, குறித்த வீதியை துணுக்காய், மாந்தை கிழக்கு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த மக்களே அதிகளவில் பயன்படுத்தி வருவதுடன் நாளாந்தம் பாடசாலை மாணவர்கள், அரச அலுவலர்கள், மீனவர்கள், விவ சாயிகள் எனப் பலர் பயணம் செய்கின்றனர். எனவே குறித்த பிரதேசத்திலுள்ள பொதுமக்களின் நலன் கருதி இவ்வீதியைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்குமாறு உரிய வர்களிடம் மக்கள் கோரிக்கைவிடுக்கின்றனர். (வ–55)

# சுகாதார வாரம் மன்னாரில் . ஆரம்பம்

மன்னார், டிசெ.7

சுகாதார வாரத்தை முன்னிட்டு ஆரம்ப நிகழ்வு கடந்த திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு மன்னார் சுகா தார மருத்துவ அதிகாரி மருத்து வர் டி.ஒஸ்மன் சாள்ஸ். தலைமையில் சிலாவத்துறை முஸ்லிம் கலவன் பாடசாலையில் நடைபெற்றது.

இதில் முசலி பிரதேச செயலாளர், பல் வைத்திய அதிகாரி யோகேஸ்வரா, பொது சுகாதார பரிசோதகர், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், சுகாதார அலுவலக உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண் டனர். (வ–56)

# உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு அமைச்சால் பயிற்சிகள்

யாழ்ப்பாணம்,டிசெ.7

உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு அமைச்சால் உணவு வழங்கல் சேவை, சிகை அலங்கரிப்பு இல்ல முகாமைத்துவப் பயிற்சிநெறிகள் நடத்தப்படவுள்ளன.

இதற்கானவிண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதால் மேற்படி பயிற்சிநெறிகளில் கலந்து கொள்ள விரும்புவோர் தத்தமது பிரிவுக் கிராம அலுவலர்கள் அல்லது நல்லூர் பிரதேச உதவித் திட்டமிடல் பணிப்பாளரிடம் தொடர்புகொண்டு தமது பெய்யர் விவரங்களைப் பதிவு செய்யுமாறு நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் அறிவித்துள்ளார். பயிற்சியின் பின்னர் உரிய தொழில் வாய்ப்பு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப் படுகிறது. (வ–7)

# மண்சரிவால் பாதித்த மலையக மக்களுக்கு கரித்தாஸ் ரூ.14 லட்சம் பெறுமதியான உதவி

கொழும்புத்துறை, டிசெ.7

மலையக மண்சரிவால் பாதிக்கப்பட்டு உயிர்கள், உடமைகள் சொத்துக்களை இழந்த மக்களின் துயர் துடைக்கும் மனித நேய உதவியாக யாழ்.மாவட்ட கியூடெக்கரித்தாஸ் நிறுவனம் 14 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களை வழங்கியுள்ளது. கியூடெக் கரித்தாஸ் மனித முன்னேற்ற நடுநிலையத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம், வன்னி மாவட்டங்களில் கத் தோலிக்க ஆலயப் பகுதிகளில் சேகரிக்கப்பட்ட உலர் உணவுகள், உடைகள், பணம் என்பன மலையை மக்களுக்கு வழங்கப் பட்டன.

இந்த உதவிகள் நலன்புரி முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு பகிந்தளிக்கப்பட்டதாக இயங்குநர் ஜாவிஸ் அடிகள் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகள் நேரடியாக சென்றடையும் வகையில் இந்த உதவிகள் சரியாகப் பங்கீடு செய்யப்பட்டு வழங்கப்பட்டதாக அவர் மேலும் கூறினார். (வ–135)

# விளம்பரங்கள்

## சனிப் பெயர்ச்சி

(09 பக்கத் தொடர்ச்சி)

வாக்கினால் சீவனம் புரிவோர் மேன்மையடைவர். குடும்பத்தில் சுப செலவுகள் உண்டாகும். 14.07.2015 குரு பகவான் 7 இல் வருவதால் திருமணத்தடை அகலும். சிலருக்கு ஆண் குழந்தை பிறக்கும். செல்வந்தர்களின் நட்பு கிட்டும். சிலர் தலைமைப் பதவியை ஏற்பர். பணப் புழக்கத்துக்கு குறைவில்லை.

சர்ப்ப கிரகங்களான ராகு தற்போது 8 ஆம் இடமான கன்னியில் இருப்பதால் எந்தக் காரியங்களில் இறங்கினாலும் தடைகளை உண்டாக்கும். கேது 2 ஆம் இடத்தில் இருப்பதால் மனக்குழப்பங்கள் மேலோங்கும். உடல் ஆரோக்கியத்தில் சிறுசிறு பிரச்சினைகள் உண்டாகும்.

**உத்தியோகஸ்தர்கள்**

உத்தியோக ரீதியாக வேலைப்பளு அதிகரித்தாலும் உடன் பணிபுரிபவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். மேலதிகாரிகளை அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். எதிர்பாராத இடமாற்றங்கள் அலைச்சலை ஏற்படுத்தலாம். புதிய வேலை தேடுபவர்களும் ஓரளவுக்கு சாதகமானவேலையைப் பெறுவார்கள்.

**மாணவர்கள்**

மாணவர்களுக்கு கல்வியில் சற்று மந்தமான நிலை நிலவினாலும் விடா முயற்சியுடன் செயல்பட்டால் எதிலும் அனுகூலம் அடையலாம். விளையாட்டுப் போட்டிகளில் கவனத்துடன் செயற்படுவது நற்பலனைத் தரும். பெற்றோர் ஆசிரியர்களின் உதவிகள் தடையின்றிக் கிடைக்கும்.

**அதிர்ஷ்டக் குறிப்புகள்**

எண் – 38, 48, 62, 71, 73, 107, கிழமை – செவ்வாய், வியாழன், நிறம் – பொன்னிறம், மஞ்சள், திசை – வடகிழக்கு, கல் – புஷ்பராகம்,

---

# மரண அறிவித்தல்

## பாலசுந்தரம் சுகுணசுந்தரி

காரைநகர், வாரிவளவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுந்தரம் சுகுணசுந்தரி (05.12. 2014) வெள்ளிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலன் - செம்பரத்தி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற பாலசுந்தரத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம், கதிரவேலு மற்றும் குமாரவேலு ஆகியோரின் அன்புச் சகோதரியும், நித்தியானந்தம், பத்மாவதி, காலஞ்சென்ற பத்மநாதன் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.12.2014) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பத்து வீடு,
வாரிவளவு, காரைநகர்.

தகவல்:
பத்மாவதி (மருமகள்)

---

# மரண அறிவித்தல்கள்



மண்ணில் 23 . 10 . 1960

விண்ணில் 16 . 11 . 2014

## சின்னத்துரை இந்திரகுமார்

யாழ்ப்பாணம் சங்கானை கிழக்கைப் பிறப்பிடமாகவும் LONDON EAST HAM ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை இந்திரகுமார் 16.11.2014 ஞாயிற்றுக்கிழமை டென்மார்க்கில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை - சிந்தாமணி தம்பதியரின் அன்பு மகனும், விஜயா அவர்களின் அன்புக் கணவரும், சபேசன் (டென்மார்க்), கிருஷன் (டென்மார்க்), தனுஷன் (டென்மார்க்), சோபியா (டென்மார்க்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சந்திரகுமார் (லண்டன்), றஞ்சித்குமார் (லண்டன்), உதயகுமார், (லண்டன்), சுலோசனா, றதிவதனா, சாந்தநாயகி, குகனா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், நவரத்தினம், தங்கத்துரை, பத்மநாதன், தங்கேஸ்வரன் (லண்டன்), மாலா (லண்டன்), சாந்தி (லண்டன்), சபிதா (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும், ஜெயதர்சன் (லண்டன்), பிரதீபன் (கனடா), தர்சன் (பிரான்ஸ்), தர்சினி (லண்டன்), விமல் (லண்டன்), வர்சன் (லண்டன்), லக்ஷன் (லண்டன்), யாழிசன் (லண்டன்), யாழிசா (லண்டன்), லிதிஷா (லண்டன்), டிதிசன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், மதன் (லண்டன்), திஷா (லண்டன்), கேமினி (கனடா), மதி, கஜன், ரேணுகா (பிரான்ஸ்), ரெயூசா, நிராகவன், யஸ்வினோ, திலக்ஷி, கீர்த்திகன், கிஷாளன், லருணியா, யதுர்சன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும், ஜேப்பா, (டென்மார்க்), மிலஷ் (டென்மார்க்), மிக்கோ (டென்மார்க்), சுபோஜா, அஸ்ஷதன், அஸ்மிதா (கனடா), அட்சரன் (கனடா), சஸ்மியா (லண்டன்), தாரிகன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (07.12.2014) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும். இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: வ. நவரத்தினம் (மைத்துனர் - சங்கானை)

லண்டன்: T.P.No. 0044 2085 489 356

இலங்கை: T.P.No. 021 568 6511, 077 588 0622

---



## சின்னத்தம்பி பொன்னுத்துரை

மந்துவில் கிழக்கு, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி பொன்னுத்துரை நேற்றுமுன்தினம் (05.12.2014) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னதம்பி - செல்லமுத்து தம்பதியீரின் ஏக புத்திரனும், கச்சீரயைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கந்தையா - செல்லம்மா தம்பதியரின் மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், மனோகரனின் (S.P.H.I. பளை), பாசமிகு தந்தையும், சுனித்தாவின் (P.M.A. தொழில் திணைக்களம், யாழ்ப்பாணம்) மாமனும், கஜகிருஷ்ணா, கஜவர்சன் (மாணவர்கள் -யாழ். இந்துக் கல்லூரி), கஜலக்சன் (மாணவன் -யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் அருமைப் பேரனும், காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் மகேஸ்வரி, கந்தசாமி (ஓய்வுநிலை இ.போ.ச.ஊழியர்), வேலாயுத பிள்ளை (ஓய்வுநிலை கிராம உத்தியோகத்தர்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.12.2014) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

டச்சு வீதி,
மந்துவில் கிழக்கு,
கொடிகாமம்.

தகவல்:
பொ. மனோகரன்
(மகன் - மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் - பளை)

(சி17982) (45.6.3)

---

# மரண அறிவித்தல்

## செல்லத்துரை கனகரத்தினம் (மூத்தண்ணை)



மாவிட்டபுரம், சங்கோலையைப் பிறப்பிடமாகவும் பலாலி கிழக்கு, வசாவிளானை வசிப்பிடமாகவும், தற்பொழுது அளவெட்டி கிழக்கு அனிஞ்சிலடியை வசிப்பிடமாகக் கொண்ட செல்லத்துரை கனகரத்தினம் (மூத்தண்ணை) 04.12.2014 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னையா - ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், தங்கத்தின் அன்புக் கணவரும், பாலகிருஷ்ணன் (ஜேர்மனி),பாமா (ஜேர்மனி), நித்தியபாமா, இராமகிருஷ்ணன், பாசமலர், ஸ்ரீகிருஷ்ணன் (லண்டன்), பவிலரசு, ராதாகிருஷ்ணன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற செல்லம்மா மற்றும் கதிரமலை, கனகாம்பிகை, நவரத்தினம், செல்வரத்தினம், குணரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் செல்லம், தங்கரத்தினம், புவனேஸ்வரி, மகேஸ்வரி, புஸ்பராணி ஆகியோரின் அன்பு மைத்துனரும், யோகேஸ் வரன், நந்தகோபாலன், கஜேந்திரன், சரோசாதேவி, தர்சிகா ஆகியோரின் அன்பு மாமனும், கீர்த்தனா, பிரசன்னா, பவிதா, சகிதா, ரசிதா, சகானா, நளாயினி, சாஜினி, பவதாரணி, கஜலக்ஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.12.2014) திங்கட்கிழமை முற்பகல் 9.00 மணியளவில அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கீரிமலை இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அனிஞ்சிலடி,
அளவெட்டி கிழக்கு,
அளவெட்டி.

(54710)
(12.3.6)

தகவல்: குடும்பத்தினர்.
TP:077 945 5946

---

# மரண அறிவித்தல்

## கிருஷ்ணபிள்ளை தங்கவடிவேல் J.P.

(இளைப்பாறிய வெளிக்கள உதவியாளர் -
மலேரியா தடுப்பு மருந்து)



அநுராதபுரத்தைப் பிறப்பிடமாகவும் இருபாலை கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணபிள்ளை தங்கவடிவேல் 05.12.2014 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஷ்ணபிள்ளை - அன்னமுத்து தம்பதிய ரின் ஏக புல்வனும், காலஞ்சென்றவர்களான இராசையா - அன்னபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், இராஜேஸ்வரியின் பாசமிகு கணவரும், ஸ்ரீதரன் (கனடா), மலர்விழி, ஸ்ரீபிரியா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், வித்தியா (கனடா), சாந்திராஜ், சுரேஸ்குமார் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனும், மைக்கல், றதீஸ், டெமி ஆர்த்தி (கனடா), டிறோசான் - பானுமதி, யோஷிகா, சிந்துஜன், சுஜன்ஜா, சரண்யா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு பேரனும், ஆருத்திரனின் ஆருயிர் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.12.2014) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் 11.00 மணியளவில் தகனக் கிரியைக்காக இருபாலை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இருபாலை கிழக்கு, கோப்பாய்.

(54699) (45.3)

தகவல்:
குடும்பத்தினர்.




# விளம்பரங்கள்

## மன்னாரில் 'குருசேத்திரம்'

வடக்கு மாகாண சபையின் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் அனுசரணையுடன் 2012 ஆம் ஆண்டிலிருந்து முன்னெடுக்கப்பட்டு வரும் கீழைத்தேயமுறை ஆடற்கதை (நடன நாடகம்) அரங்க வடிவத்துக்கான ஆரம்ப அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் தொடர்பில் கடந்த வருடமும் வவுனியா மாவட்ட ஆடல் அணியினரால் ஆற்றுகைப்படுத்தப்பட்ட 'குருசேத்திரம்' கீழைத்தேய முறை ஆடற்கதை அரங்க வடிவம் முதலில் வவுனியாவிலும் அதன் பின்பு யாழ்ப்பாணம்,கிளிநொச்சி, முல்லைத்தீவுஆகியமாவட்டங்களில் ஆற்றுகை செய்யப்பட்டது.

இந்தத் தொடரில் மன்னார் மாவட்ட பாடசாலைகளின் ஆடற்கல்வி ஆசிரியர்கள், நாடகமும் அரங்கியலும் கற்பிக்கும் ஆசிரியர்கள், இவற்றைப் பயிலும் ஜி.சீ.ஈ. சாதாரணதர, உயர்தர மாணவ மாணவியருக்குப் பயன்தரத்தக்க முன்மாதிரியான ஆற்றுகை வடிவமாக இது அமையும் என்பதால் அவர்கள் பார்வையிடுவதற்கான ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் படியான அறிவித்தலை மாகாணக் கல்வி அமைச்சு மன்னார் வலயக் கல்வி திணைக்களத்தினூடாக வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நாளை திங்கட்கிழமை பி.ப. 3 மணிக்கு மன்னார் நகர சபை கலையரங்கில் ஆற்றுகைக்கு வரும் இந்த நிகழ்வுக்கு மன்னார்மறை மாவட்ட ஆயர் அருட்பெருந்திரு. இராயப்பு ஜோசப் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு சிறப்பிப்பார். அத்துடன் வடக்கு மாகாண சபை அமைச்சர்கள், உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், உயரதிகாரிகள் மற்றும் மன்னார் மாவட்ட அரச அதிகாரிகள், உள்ளூராட்சி மன்ற நிர்வாகிகள் ஆகியோரும் அழைக்கப்பட்டு உள்ளார்.

ஈழத்து முதுநிலை ஆடற்கலை ஆற்றுகையாளரும் முன்னாள் வடக்கு, கிழக்கு மாகாண சபையின் ஓய்வு பெற்ற அழகியல் கல்வி பிரதிப் பணிப்பாளருமான கலைஞர் வேல் ஆனந்தன் அவர்கள் நெறியாள்கை செய்து சமர்ப்பிக்கும் இந்தக் கீழைத்தேயமுறை ஆடற்கதை அரங்க வடிவத்தை வவுனியா ஆடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் 'முத்தமிழ்ச்சுடர்' திருமதி சூரியயாழினி வீரசிங்கம் அவர்கள் வழிப்படுத்தல் (நட்டுவாங்கம்) செய்வார். 5 ஆவது தடவையாக இந்த அரங்கப்படைப்பு மன்னாரில் அரங்காட வருகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.


## லக்ஷ்மி என்ஜினியர்ஸ்

**253, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம், (ரெயில் கடவைக்கு அருகில்)**

**லேத் வேலைகள்**
- ★ வாகனங்களுக்கான உதிரிப்பாகங்கள் மாற்றியமைத்தல்
- ★ அச்சு இயந்திரத்துக்கான உதிரிப்பாகங்கள் மாற்றியமைத்தல்
- ★ வாகனங்களுக்கான காபரேட்டர் செற்றிங் செய்தல்.

**ஓட்டுவேலைகள்**
- ★ கிறில், கேற், ரஸ், செப்பு ஓட்டுவேலைகள்
- ★ சிறிய, பெரிய வாகனங்களுக்கு தகரம் மற்றும் அலுமினிய பொடி அடித்தல்.

**றீவைண்டிங்**
- ★ மோட்டார், ரான்ஸ்போமர்
- ★ மின் மற்றும் இலத்திரனியல் பொருள்கள் திருத்துதல்

**அச்சு இயந்திரம்**
- ★ திருத்துதல், சேவிஸ் செய்தல், அச்சு இயந்திரத்துக்கான பேப்பர் கட்டிங் பிளேட் தீட்டுதல்.






தினக்குரல்

# விளம்பரங்கள்

## 800 வருட தங்க தங்கவாரகன் நாணயம் பெந்தோட்டையில்

800 வருடங்கள் பழமை வாய்ந்த தங்க தங்கவராகன் நாணயம் ஒன்று பெந்தோட்டையில் சிக்கியுள்ளது.

தம்பதெனிய யுகத்தில் அரசோச்சிய 2ஆம் பராக்கிரமபாகு காலத்தைச் சேர்ந்தது என்று கருதப்படும் 800 ஆண்டுகள் வரையில் பழைமை வாய்ந்த தங்க வராகன் நாணயம் ஒன்று பெந்தோட்டைப் பிரதேசத்தில் உள்ள வீட்டுக் காணி ஒன்றில் இருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளது.

பெந்தறைகாலி வீதியில் அமைந்துள்ள ஓய்வு பெற்ற பாடசாலை அதிபர் ஒருவரான டபிள்யூ. ஏ. விஜேதாச என்பவரது வீட்டுக் காணியில் கிடைத்துள்ள இந்த தங்க வராகன் நாணயம் 2 சென்றி மீற்றர் விட்டதைக் கொண்டுள்ளதோடு இந்த நாணயக் குற்றியில் எழுத்துக்களுடன் உருவம் ஒன்றும் பொறிக்கப்பட்டுள்ளது.

இந்த நாணயத்தை கழுவிச் சுத்தப்படுத்தியபோது தங்க நிறத்தோடு காணப்பட்டதோடு அங்கிருந்துள்ள சில முதியவர்கள் அது தங்கவராகன் காசு என்றும் தெரிவித்துள்ளனர்.

மேலும் பண்டைய கால தங்க வராகன் பற்றிய இணையத்தள தகவல்களும் அது ஒரு தங்க வராகனே என்று உறுதிப் படுத்தியிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. பழைய 50 சதக் குற்றி ஒன்றின் அளவில் காணப்படும் இந்த தங்க நாணயமானது அதை விட தடிப்பத்தில் குறைந்ததாகவும் உள்ளது. பெந்தோட்டைப் பிரதேசம் பண்டைய அரசர்கள் சிலரது நிர்வாகத்தின் கீழ் இருந்துள் ளதால் இங்கு மேலும் வரலாற்றுச் சின்னங்கள் புதைந்திருக்கக் கூடும் என்றும் கருதப்படுகிறது. (வ-22)




## திருத்தப்படுமா அளவெட்டி டச்சு வீதி

அளவெட்டி ஊடாக விளான், இளவாலை, பண்டத்தரிப்பு ஆகிய கிராமங்களுக்குச் செல்லும் டச்சு வீதி நீண்ட காலமாக திருத்தப்படாமையால் குண்டும் குழியுமாக உள்ளதுடன் தற்போது பெய்யும் மழை நீர் குழிகளில் தேங்கி நிற்பதால் இந்த வீதியைப் பயன் படுத்தும் மாண வர்கள், பாதசாரிகள் பலத்த சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

குறிப்பாக அளவெட்டி கும்பழை வீதியை இணைக்கும் இந்த டச்சு வீதியில் பெரிய குளமொன்றைப் போன்று நீர் தேங்கிக் காணப் படுகிறது. இது இருபக்க கரையோரத்தையும் ஆக்கிரமித்துள்ளது. அருணோதய, மகாஜன, யூனியன் கல்லூரி, ஆகியவற்றுக்கும் இளவாலை பகுதி பாடசாலைகளுக்கும் செல்லும் மாணவர்கள் குறித்த வீதியைப் பயன்படுத்தி வருவதால் மழை காலங்களில் பல கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர். (வ-36)

## கட்டாக்காலி கால்நடைகளால் அதிகரிக்கும் வீதி விபத்துகள்

கரணவாய், டிசெ. 7

ஏ-9 பிரதான வீதியில் இரவு நேரங்களில் திரியும் கட்டாக் காலி மாடுகளால் வீதிகளில் பயணம் செய்வோர் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்கி வருவதுடன் விபத்துக்கு உள்ளாகும் சூழ்நிலையும் ஏற் பட்டுள்ளது.

ஏ-9 பிரதான வீதியில் ஓமந்தை புளியங்குளம், கனகராயன் குளம், மாங்குளம், முறிகண்டி ஆகிய பகுதிகளிலுள்ள வீதிக ளில் கட்டாக்காலி மாடுகள் கூட்டம் கூட்டமாக நடமாடுவதுடன் வீதிகளின் நடுவே படுத்து உறங்கியும் வருகின்றன.

குறித்த வீதியில் பல இடங்களில் வீதி விளக்குகள் பொருத்தப் படாமையால் இரவு நேரங் களில் பயணம் செய்யும் வாகனச் சாரதிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

ஏ-9 பிரதான வீதியூடாக நாளாந் தம் பல்லாயிரக்கணக் கான வாகனங்கள் போக்கு வரத்தில் ஈடுபட்டு வருகின்றன. இந்தச் சூழ் நிலையில் மாலை நேரங்களி லும் இரவு நேரங் களிலும் மாடுகள் வீதி வழி யாகச் செல் வதுடன் வீதியின் நடுவே படுத்து உறங்குகின்றன. தற்போது மழை இருட்டுக் காரணமாக கறுப்பு நிற மாடுகள் வீதியில் நடமாடும் போது வாகனச் சாரதிகள் அவற்றை அவ தானிக்காது வாகனத்தை செலுத் தும் சந்தர்ப்பங்களில் பெரும் விபத் துகள் ஏற்படக் கூடிய சூழ்நிலை காணப் படுவ தாகவும் தெரிவிக்கப்படுகின் றது. (வ-108-402)


TATA MOTORS
TATA
மக்களின் தெரிவு
nano twist
எமக்கென ஒரு கார்
வேலைக்குச் சென்றுவர
காலம் வந்துவிட்டது
இருச்சக்கரத்திலிருந்து மாறுவதற்கு
காலம் வந்துவிட்டது
முச்சக்கரத்திலிருந்து மாறுவதற்கு
காலம் வந்துவிட்டது
முழு குடும்பத்திற்கும் பயணம்செல்ல
காலம் வந்துவிட்டது
ஹைவேயில் வேகமாய்ச்செல்ல
காலம் வந்துவிட்டது
மகள், மகனுக்கு வாங்கிக்கொடுக்க
காலம் வந்துவிட்டது
nano twist
சிறந்த கலரை சிறப்பாய் வாங்கிச்செல்லுங்கள்
ரூ.1,375,000/-* மாத்திரமே
*நிபந்தனைகளுக்கு உட்பட்டது
dimo TECHNOLOGY
வ/ப டீசல் மற்றும் மோட்டார் இஞ்சினியரிங் பொது நிறுவனம்
இல:65, ஜேதவனா வீதி, கொழும்பு 14.
www.dimolanka.com/tata/passenger-vehicles | www.facebook.com/Dimo Lanka | www.tatamotors.lk
இப்போதே அழையுங்கள் : 0779 11 71 54
75 dimo
years of Perfection


முழுமையாக
அனுபவியுங்கள்
இந்தியச் சுவையினை தாராளமாக அனுபவியுங்கள்
Hutch உடன் இந்தியாவில் உலாவும் போது டேடா ரோமிங் கட்டணங்களைப்
பற்றிய கவலையை விட்டு விடுங்கள்.
3 நாட்களுக்கு ரூ. 297 மாத்திரமே.
ரூ. 397 ரீலோட் செய்து எந்தவொரு நாட்டுக்கும் வரையறை அற்ற SMS,
இந்திய அழைப்புகள் மற்றும் டேடா பெற்றுக் கொள்ளுங்கள்.
HUTCh
Dial 1788 : www.hutch.lk


PIXMA
Quality. Promised.
Canon
Delighting You Always
CATRIDGE
ஒன்றின் விலை
ரூ. 1250/=*
அதிக எண்ணிக்கையிலான பிரதிகள்
அதிக சேமிப்பு
E400
ரூ. 10,900/=
E460
ரூ. 13,900/=
E510
ரூ. 17,250/=
E560
ரூ. 20,900/=
E610
ரூ. 22,400/=
அதிகாரமுள்ள விற்பனை முகவர்
metropolitan
METROHUB
0776 343 815
0771 727 536
0716 432 549
0779 940 483
0777 742 800
0771 642 090
0777 773 016
0714 757 911
0772 663 643
0772 663 593
0719 193 131
0772 642 111
0716 798 528
0775 541 360
0772 663 634


தரமான ஹரிஸ்சந்திர
உற்பத்திகள்
மா
RICE FLOUR
KURAKKAN FLOUR
அப்பளம்
உடனடி தயாரிப்பு
கோப்பி
நூடில்ஸ்
NOODLES
சவர்க்காரம்
தரத்திற்கான நம்பகரமான பெயர்
ரூ.25.00 தொடக்கம்
www.harischandramills.com
(C/16683)


5 வருட WARRANTY*
உங்கள் கம்பீரத்தை
கட்டவிழ்த்துவிடுங்கள்!
Hero
ஆண்மை வீரியத்துடன் LED பின் விளக்குகளுடன்
அலட்சியம் செய்துவிட முடியாது தீவிர போக்கும்
வானில் இடி ஓசையும் வீதிகளில் வீர முழக்கமும்
முழங்க வலம்வாருங்கள்.
Hunk
BECAUSE MUSCLES MATTER
சக்திமிக்க 150 CC ATFT என்ஜின்
டைனமிக் டபள் டிக்ஸ்
கவர்ச்சியான வெலொக் கன்சோல்
ரூ. 286,990/= மட்டுமே
facebook.com/HeroMotoCorpSriLanka
☎: 011 5777000
நாடெங்கிலுமுள்ள அபான்ஸ் ஹீரோ காட்சியறைகள் மற்றும் ஹீரோ விற்பனை முகவர்களிடமும் பெறலாம்.
Abans


Clean & Clear
DREAM shopping
மலேசியா
சிங்கப்பூர்
இந்தியா
உங்கள் பிரியமான தோழியுடன்
04. வீடு பராமரிப்பவர் (Care Taker ) வயது 40 இற்கு மேல்.
தங்கியிருந்து வேலை செய்தல் அவசியம்.
குடிப்பழக்கம் இல்லாதவர் விரும்பத்தக்கது.
05. Store Keeper அனுபவம் உள்ளவர்கள் மட்டும்
தொடர்பு கொள்ளவும்.(ஆண்)

உடன் தொடர்பு கொள்ளவும்.

(54668)

**T.P - 0773478427 , 021 2219946**

# வேலை வாய்ப்பு

கொழும்பில் உள்ள இலங்கையில் தலைசிறந்த Flexible Packaging நிறுவனம் ஒன்றுக்கு பின்வரும் வேலையாள்கள் தேவை.

1. Extruder (பொலித்தீன் இயந்திரம்) இயக்குநரும் உதவியாளரும்
2. Printing (Grovio/Flexo) இயந்திரம் இயக்குநரும் உதவியாளரும்
3. Bag Cutting இயந்திர இயக்குநரும் உதவியாளரும்
4. Pallet இயந்திர இயக்குநரும் உதவியாளரும்.
5. Lorry உதவியாளர்
6. பூந்தோட்ட சுத்திகரிப்பாளர்

மேற்படி இயந்திரங்களில் வேலை செய்த அனுபவம் உள்ளவர்களும், அனுபவம் இல்லாதவர்களும் விண்ணப்பிக்கலாம். தேவையேற்படின் வேலைக்கு முன்னரான பயிற்சி வழங்கப் படும்.

★ வயது எல்லை : 20-45

★ வேலைத்தளத்துக்குள்ளேயே தங்குமிட வசதிகள் செய்துகொடுக்கப்படும்.

நேர்முகப்பரீட்சைகள் கீழே தரப்பட்டுள்ள முகவரியில் நடைபெறும்.

கல்வி மற்றும் சான்றிதழ்களுடன் நேரில் சமுகம் தரவும். வேலை செய்யும் இடம் மற்றும் தங்குமிடம் பற்றிய Video படம் நேர்முகப்பரீட்சையின் போது காண்பிக்கப்படும். (சிங்கள-தமிழ் மொழிபெயர்ப்பாளர் ஒருவரும் சமுகமளிப்பார்.

| | |
|---|---|
| விலாசம் | : அன்னை நாகா பூட் சிட்டி, 175, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். |
| திகதி | : 14.12.2014 |
| நேரம் | : 9 a.m - 5 pm |
| தொடர்பு இல | : 077 4773483 |

(C/17985) (10.6.3)


# செய்திகள்

## கவிதை நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், டிசெ. 7

அ.கயல்விழியின் தேடலின் சாரல் கவிதை நூல் வெளியீட்டு விழா இன்று ஞாயிறு பிற்பகல் 3 மணிக்கு பருத்தித்துறை 4ஆம் குறுக்கு தெரு ராஜா ராணி சேவை இல்ல மண்டபத்தில் யோ.இருதயராசா தலைமையில் இடம் பெறவுள்ளது. முதற்பிரதியை பருத்தித்துறை பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் செல்வி சே.செல்வசுகுணா பெற்றுக் கொள்வார். நூலுக்கான நயப்புரையை வட இந்துமகளிர் கல்லூரி ஆசிரியை திருமதி சிவமகேஸ்வரன், சிதம்பராக் கல்லூரி ஆசிரியர் சோ.சிவனேஸ்வரன் ஆகியோர் வழங்குவர். (ஒ-23)





**பாராட்டி வாழ்த்துகின்றேன்**

யா/ வதிரி வடக்கு மெ.மி.த.க. பாடசாலையின் இன்றைய பரிசளிப்பு விழா சிறப்புற அமைய வாழ்த்துவதோடு

2014 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 174 புள்ளிகளைப் பெற்று சித்தியெய்தி பாடசாலைக்குப் பெருமை சேர்த்த

செல்வி **இ.விஸ்ணுகாவையும்**

ஏனைய பரிசில்பெறும் மாணவர்களையும் வாழ்த்துகின்றோம்.இந்த மாணவர்களைப் பயிற்றுவித்த அதிபர், ஆசிரியர்களையும் நன்றியுடன் நினைவுகூருகின்றோம்.

வாழ்த்துபவர்: **க.பராக்கிரமன்**
உரிமையாளர்- பராக்கோ மோட்டார் உதிரிப்பாக விற்பனை நிலையம். நெல்லியடி.

(53748) (45.6.3)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



யா/இணுவில் மத்திய கல்லூரியில் 2014 தரம்-05 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த

**வரதராசா சிவாகர்**

அவர்களை மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்:**
**இராசரத்தினம் மனோன்மணி குடும்பத்தினர்.**

(54780)(10.6.3)


## கிற்றார் கலைஞருக்கான கலந்துரையாடல் இன்று

யாழ் கிற்றார் கலைஞர்களின் அரங்கு ஏற்பாடு செய்துள்ள கிற்றார் கலைஞர்களுக்கான விசேட கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. நிர்வாகத் தெரிவு நடைபெறவுள்ளதால் அரங்கிற்கான அலுவலகங்கள், வளங்கள் மற்றும் பயிற்சிகளுக்கான ஏற்பாடுகள் குறித்து கலந்துரையாடப்படவுள்ளன.

ஏற்கனவே கிற்றார் கலைஞர்கள் அரங்கில் பதிவு செய்தவர்களை இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறும் பதிவு செய்யாத கலைஞர்கள் பதிவுகளை மேற்கொள்ள முடியும் என்றும் அரங்கின் இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (ஒ-10)

## பரிசளிப்பு விழா

நெல்லியடி, டிசெ. 7

வதிரி வடக்கு மெ.மி.த.க. பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று ஞாயிறு காலை 9.30 மணிக்கு பாடசாலை அதிபர் ப.சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்வி அலுவலக நிர்வாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் யோ.ரவீந்திரன் கலந்து கொண்டு வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்களை வழங்கிக் கௌரவிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக ஓய்வு நிலை மக்கள் வங்கி முகாமையாளர் பி.கிருஷ்ணானந்தன் நெல்லியடி சனசமூக நிலையத் தலைவர் சு.கிருஷ்ணராஜா ஆகியோரும் கௌரவ விருந்தினராக வர்த்தகர் சி.அகிலதாஸும் கலந்து கொள்வர். (ஒ - 108)


**CAPS**
**(Canadian Academy of Professional Studies)**

No.52, Palaly Road, Thirunelvely Junction, (Near Sampath Bank)

**ஆங்கிலத்தில் பயிற்சிபெற அரியதோர் சந்தர்ப்பம் ஆண், பெண் இருபாலாருக்கும் தாதியர் பயிற்சி பெற எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.**

**IELTS**
- 03 மாதங்கள், 50 மணித்தியாலங்கள்.
- பொருத்தமான கற்பித்தலும், பயிற்சியும்.
- சிறந்த பல்கலைக்கழக விரிவுரையாளர்களால் கற்பிக்கப்படுகின்றது.

**NURSING**
- (Canadian Curriculum) செயன்முறை மூலமான பயிற்சிகள் வழங்கப்படும்
- பயிற்சிக் காலங்களில் பயிற்சியாளர்களுக்கு தனியார் வைத்தியசாலைகளில் பயிற்சி கொடுக்கப்படும்.
- ஆங்கிலம் பேச பயிற்சிகள் வழங்கப்படும்.
- தகுதியானவர்களுக்கு அந்த வைத்தியசாலைகளில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.

**TEACHER TRAINING IN ENGLISH**
- தொழில்சார் கல்வி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற டிப்ளோமா சான்றிதழ்.
- ஆங்கிலம் கற்பிப்பதற்கான பயிற்சிநெறி பயிற்சி வாரநாள்கள் அடங்கலாக 10 மாதம் வழங்கப்படும். தகுதியானவர்களுக்கு வேலைவாய்ப்பு பெற்றுக் கொடுக்கப்படும். சிறந்த தகுதி வாய்ந்த வளவாளர்கள் பயிற்சி அளிப்பார்கள்.

**விண்ணப்ப கடைசித் திகதி 14.12.2014**
**வகுப்புக்கள் ஆரம்பம் 15.12.2014**

**குறிப்பு:** மேற்படி கற்கைநெறிகளில் சித்தி பெறுவோருக்கும் மற்றும் UK. USA, Australia, Newzeland, Canda ஆகிய நாடுகளில் தொழில் வாய்ப்புக்கள் பெற ஆலோசனையும் தொழில் விசா, மாணவர் விசா என்பவற்றுக்கான சட்ட உதவியும் வழங்கப்படும்.

**தொடர்புகளுக்கு:** Sri Lanka 0773867458
**அலுவலகம்:** 0212052240
Canada (416) 986 9554



# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## மு/கோம்பாவில் விக்கினேஸ்வரா வித்தியாலயம் புதுக்குடியிருப்பு






2014 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு நேற்று (06.12.2014) சனிக்கிழமை முல்லைத்தீவு கோம்பாவில் விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெற்றது,

**படத்தில் இருப்பவர்கள்:**
பாடசாலையின் அதிபர்-திரு.சந்திரகுமார், வலது பக்கம் உப அதிபர்-திருமதி க. குணதேவி, இடது பக்கம் தரம் 5 ஆசிரியர்களான திரு.ஜெ.சபேசன், திருமதி.மே.அருளானந்தம் மாணவர்கள் வரிசையில்- ம.தேனுஜன்-162, பு.றொசாந்-170, கி.டிலோஜன்-167, ச.அனோஜன்-169, சி.நிருக்சன்-166, சி.ரிலச்சி-190, ப.வனஜா-157, தி.சாளினி-169, பு.டிலக்சனா-156, இ.தர்மிகா-159, பா.கதிர்சன்-169, வி.அச்சுதன்-175

இவர்களுடன்70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களையும் (19) பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**பாடசாலைச் சமூகம்**
**கோம்பாவில், புதுக்குடியிருப்பு.**

(C/18087)(10.6.3)

### முன்பள்ளி கலைவிழா

யாழ்ப்பாணம், டிசெ. 7

கொக்குவில் வளர்மதி முன்பள்ளி வருட இறுதி கலைவிழாவும் முன்பள்ளி மாணவர்களை வழி அனுப்பும் நிகழ்வும் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு வளர்மதி முன்னேற்றக் கழக வேலாயுதபிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

நிகழ்வின் பிரதம விருந்தினர்களாக யாழ் பல்கலைக் கழக விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் எஸ். சிறிசற்குணராஜா, மொழியியலும் ஆங்கில இலக்கியத்துறைத் தலைவர் திருமதி சிவராணி சற்குணராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (த)

### சுதர்சனக் கிரியா

யாழ்ப்பாணம், டிசெ. 7

வாழும் கலைப் பயிற்சி பெற்றவர்களுக்கான சுதர்சனக்கிரியா பயிற்சி ஒவ்வொரு ஞாயிறும் காலை 7 மணிக்கு நல்லூர் கந்தசாமி கோவில் வடக்கு வீதியிலுள்ள மகேஸ்வரன் மண்டபத்தில் நடைபெற்று வருகிறது. பயிற்சி எடுத்தவர்கள் கலந்து கொண்டு பயன்பெறுமாறு வாழும் கலை அமைப்பினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (ஒ-ரி)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியையான
செல்வி கௌரி மனோகரி சிவப்பிரகாசம்
அவர்களின் அன்புத் தாய்

திருமதி
**சொர்ணலட்சுமி சிவப்பிரகாசம்**

அவர்களின் மறைவையொட்டி எமது ஆழ்ந்த அனுதாபங்களை அன்னாரின் குடும்பத்தினருக்கு தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/கரம்பொன் சண்முகநாத ம.வி

(54725) (16.6)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர்
**பூபாலசிங்கம் பொன்னம்மா**



தோற்றம்
12.10.1939

மறைவு
07.11.2014

கடந்த 07.11.2014 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம் பூபாலசிங்கம் பொன்னம்மா அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (07.12.2014) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். தொடர்ந்து இடம் பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இலங்கை வங்கி முன்பாக,அளவெட்டி — குடும்பத்தினர்

## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**வல்லிபுரம் குருசாமி**
(கலைச்சுடர்)



மலர்வு
16.12.1922

உதிர்வு
27.11.2004

திதி: 07.12.2014

பாசத்தின் இருப்பிடமாய்
பண்பில் உயர்ந்தவனாய்
உறவுகளை அரவணைத்தாய் எம் குலவிளக்கே
பத்து ஆண்டுகள்தான் சென்றதையா
எத்தனை காலம் சென்றாலும் உம் நினைவுகள்
எம் நெஞ்சில் நீங்காமல் குடியிருக்கும்

உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

நீலியம்பனை,மல்லாகம் — குடும்பத்தினர்

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மலர்வு: 21.01.1934 — உதிர்வு: 08.11.2014

அமரர் **வேலுப்பிள்ளை தாமோதரம்பிள்ளை**
(ஓய்வுபெற்ற தபாலக ஊழியர்)

கடந்த 08.11.2014 அன்று சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் வேலுப்பிள்ளை தாமோதரம்பிள்ளை அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (08.12.2014) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மரணச் சடங்கில் கலந்துகொண்டவர்களுக்கும், பல வழிகளில் உதவி புரிந்தவர்களுக்கும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரம் வெளியிட்டவர்களுக்கும் எமது உளமார்ந்த நன்றி களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.


முளாய் பிள்ளையார் கோயிலடி, சுழிபுரம். — குடும்பத்தினர்.

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

அன்னை மடியில்
15.01.1944

இறைவன் அடியில்
08.11.2014



அமரர் **ஆறுமுகம் பஞ்சரத்தினம்**

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (08.12.2014) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(54723)(10.6)

புத்தூர் கிழக்கு, கல்யாணி வீதி, புத்தூர். — குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

திருமதி **மனோன்மணி இராமர்**



தோற்றம்
29.12.1930

மறைவு
09.11.2014

எமது குடும்பத்தலைவியின் மறைவுச்செய்தி கேட்டு எமக்குப் பல்வேறு வழிகளில் உதவியும் ஆறுதலும் அளித்த அனைவருக்கும் நேர்முகத்திலும் தொலைத்தொடர்பு சாதனங்கள் மூலமாகவும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் தொலை தூரத்திலிருந்து அன்னாரைத் தேடி வந்து அஞ்சலி செலுத்தியோருக்கும் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும் போசனமளித்து உதவியவர்களுக்கும் மற்றும் சகலவழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கியோருக்கும் எமது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு நாளை மறுதினம் (09.12.2014) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெறும். இந்த நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் கலந்து கொள்ளுமாறு தாழ்மையுடன் வேண்டிக் கொள்கின்றோம்.

162, பொற்பதி வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில். (54396)(4.6.3)

பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## 16 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி
**ஜெயம் பரிமளம்**
(கல்யாணி)



பிறப்பு
23.02.1953

இறப்பு
07.12.1998


அன்னையே!
அன்பின் வடிவமே! அரவணைப்பின் தெய்வமே!
கண்ணின் மணிபோல் கருவில் காத்தவளே - நாம்
பிஞ்சு மழலையாய் அவதரிக்க நின் மடி தந்தவளே!
ஆராரோ சொல்லி நீ எம்மை உறங்க வைத்தாயே!
உறங்கும் அழகைக் கண்டு நீங்கள் துயில் மறந்தீர்களே அம்மா!
இன்று நீங்கள் நிஜமாகவே
ஐந்து பிள்ளைகளையும் தவிக்கவிட்டு துயில் கொள்கின்றீர்கள் அம்மா!
அன்பாய் பண்பாய் என்றும் இனிதாய்
குடும்பம் காத்த அன்புத் தெய்வத்தை - இழந்தே
இன்றும் துன்பம் கொண்டே துவளுகின்றோம் - நாளும் எம் தெய்வமே!
திதி நன்நாளில் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வ. ஜெயம்,
வண்ணாங்கேணி வடக்கு, பளை.
தொ.பே. 077 204 8546

உங்கள் துயரில் மூழ்கும்
அன்புக் கணவர்,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# தொடர்ச்சி

## விடை பெற்றார் அமெ. தூதுவர்



யாழ்ப்பாணம், டிசெ. 07

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராக, கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகப் பணியாற்றிய மிச்செல் ஜே சிசன் தனது பணியை முடித்துக்கொண்டு அமெரிக்கா சென்றுள்ளார்.

ஐ.நா மற்றும் ஐ.நா பாதுகாப்புச் சபைக்கான அமெரிக்காவின் பிரதித் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளதை அடுத்தே, அவர் அந்தப் பொறுப்பை ஏற்பதற்காக வோஜிங்டனுக்கு நேற்று முன்தினம் திரும்பியுள்ளார்.

இலங்கையிலிருந்து வெளியேறுவதற்கு முன்னதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் மற்றும் ஏனைய அரச அதிகாரிகளைச் சந்தித்து அவர் விடை பெற்றுள்ளார்.

இதன்போது, இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்துவதற்கு ஜனாதிபதி மஹிந்த மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஆகியோர் மிச்செல் ஜே சிசனுக்கு வாழ்த்துக் கூறியுள்ளனர்.

மிச்செல் ஜே சிசன் கொழும்பில் இருந்து அமெரிக்கா திரும்பியுள்ள நிலையில், கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தில் துதுவர் பணிக்கு இன்னமும் எவரும் நியமிக்கப்படவில்லை. (த-5)

## 3 மாதங்களுள் இரு தடவை எரிபொருள் விலை குறைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ. 7

எரிபொருள்களின் விலைகள் கடந்த மூன்று மாதங்களுக்குள் இரண்டு தடவைகள் குறைக்கப்பட்டுள்ளன.

இந்த விலைக் குறைப்பு நேற்று முன் தினம் நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பெற்றோல், டீசல் ஆகியவை லீற்றர் ஏழு ரூபாவினாலும், மண்ணெண்ணெய் லீற்றர் ஐந்து ரூபாவினாலும்குறைக்கப்பட்டுள்ளதாக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

இந்த விலை குறைப்பின் பிரகாரம் யாழ். மாவட்டத்தில் ஒரு லீற்றர் பெற்றோல் 157 ரூபாவில் இருந்து 150 ரூபாவாகவும், டீசல் 118 ரூபாவில் இருந்து 111 ரூபாவாகவும், மண்ணெய் 86 ரூபாவில் இருந்து 85 ரூபாவாகவும் விலை குறைக்கப்பட்டுள்ளது. இதேவேளை, கடந்த செப்ரெம்பர் மாதம் மண்ணெய் லீற்றர் 20 ரூபாவினாலும், டீசல் மூன்றுரூபாவினாலும்,பெற்றோல் ஐந்து ரூபாவினாலும் விலை குறைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-17)

## பிள்ளையார் பெருங்கதை

வட்டு வடக்கு,சித்தங்கேணி பிரமனாச்சி தோட்ட கற்பக விநாயகர் ஆலயத்தில் பிள்ளளையார் பெருங்கதை (விநாயகர் சஷ்டி விரதம்) படிப்பு இன்று ஆரம்பமாகி 27.12.2014 சனிக்கிழமை வரை நடைபெறவுள்ளது. தினமும் மு.ப. 10 மணிக்கு ஆரம்பமாகும் பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து பெருங்கதை படிப்பு 21 நாள்களும் நடைபெறவுள்ளதுடன் 20 ஆம் நாள் வெள்ளிக்கிழமை கஜமுகாசுர சங்காரம் நடைபெறும். (த)

## நாவலர் விழாவும் பரிசளிப்பும்

உடுவில் இந்து இளைஞர் மன்றம் நடத்தும் நாவலர் விழாவும் பாலர் பாடசாலை மாணவர்களின் பரிசளிப்பு விழாவும் இன்று ஞாயிறு பிற்பகல் 1.00 மணிக்கு உடுவில் மேற்கு பாலர் பாடசாலை மண்டபத்தில் மன்றத் தலைவர் தியாகச் சந்திரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு வலிகாமம் வலயக் கல்வி அலுவலக முன் பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் நூபா உதயரட்ணம் பிரதம விருந்தினராகவும்சிறப்பு விருந்தினராக இந்து தர்ம ஆசிரியர் த.மனோஜ்குமாரும் கலந்து கொள்ளவுள்ளனர். இந்த நிகழ்வில் நாவலர் நினைவு உரையை சிறப்பு விருந்தினர் வழங்குவார். கலைபூரணம் வைசிவனேசன்,சக்தியாக ராசா ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளனர். இதேவேளை நவராத்திரிவிழா ஆங்கில தினம், ஆக்கத்திறன் போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கு பரிசுகள் வழங்கப்படவுள்ளது

## தொடர்ச்சிகள்...

### மின்சாரக்

எதிர்க்கட்சிக்கு தாவியவர் களும் ஈடுபட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப் பட்டதிலிருந்து ஒவ்வொரு தரப்பினரையும் அலரி மாளிகைக்கு அழைத்து அவர்களுடன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சந்திப்புக்களை மேற்கொண்டு வருகின்றார்.

அந்த வகையில் பௌத்த மதக் குழுக்களுடனானசந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அல் ஜசீரா தொலைக்காட்சி என்னைச் சர்வதேசப் போர்க்குற்ற நீதிமன்றத்துக்குக் கொண்டு போவது பற்றிய தகவல்களை வெளியிட்டுள்ளது. என்னைத் தோல்வியுறச் செய்து போர்க்குற்றச்சாட்டின் பேரில் மின்சாரக் கதிரைக்கு அனுப்புவதே அதன் நோக்கம்.

ஜனாதிபதியாக நான் பதவி வகிக்கும் வரை என்னைச் சர்வதேச போர்க்குற்ற நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்ல முடியாத காரணத்தால் இத்தகைய சூழ்ச்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. 'தோல்வியுறச் செய்து தாருங்கள். நாம் அவரைக் கொண்டு சென்று சர்வதேச போர்க்குற்ற நீதிமன்றத்தில் நிறுத்துவோம்' என்றே சம்பந்தப்பட்டவர்கள் கோருகின்றனர். இதற்கு மறைமுகமாகத் தூண்டிவிடும் செயற்பாடுகளில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்சாவும், ஆளுங் கட்சியிலிருந்து எதிர்க்கட்சிக்குத் தாவிய விஜேசிங்கவும் செயற்படுகின்றனர்.

எதிர்காலம் தொடர்பில் நம்பிக்கை இழந்திருந்த மக்களுக்கு நாம் உயிர்த்தானம்வழங்கியதற்குஎமக்குக் கிடைக்கும் பிரதிபலன் இது தான். நாடு பற்றி சிந்திக்காத, மக்கள் பற்றி சிந்திக்காதவர் களே இத்தகைய செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர் – என்றார். (த-5)

### நிரந்தரத்

கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் வவுனியா சுவர்க்கா விருந்தினர் விடுதியில் நேற்று நடைபெற்றது. அதன் பின் ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:–

தற்போது இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் நிறைவேற்று அதி காரத்தை ஒழித்தல், ஊழல் அற்ற ஆட்சியை உருவாக்கல், குடும்ப ஆட்சிக்கு முற்றுப் புள்ளி வைத்தல், ஜனநாயக ஆட்சியை உரு வாக்குதல் போன்ற பொதுப் பிரச்சினைகளை முன்வைத்து எதிர்க் கட்சியினர் களமிறங்கியுள்ளனர்

ஆனால் தமிழர்களின் முக்கிய பிரச்சினைகள் உள்ளன.போர் நிறைவடைந் துள்ளபோதும் தமிழ் மக்கள் பலர் இன்னமும் சொந்த இருப்பிடங்களில் மீளக் குடியமர்த்தப் படவில்லை. தமிழர்களின் அகதி வாழ்வு இன்னமும் தொடர்கிறது. சம்பூரில் 2ஆயிரம் மக்களின் காணிகள் இராணுவத்தால் அபக ரிக்கப்பட்டுள்ளன. அரசியல் கைதிகள் இன்னமும் சிறை யில் வாடுகிறார்கள்.

இனப் பிரச்சினைக்கு இன்னமும் அரசினால் தீர்வு முன்வைக்கப்படவில்லை. இந்தப் பிரச்சினைகளுக்குஎன்ன தீர்வு என்று ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கியுள்ள ஆளும் கட்சி ஜனாதிபதி வேட்பாளர் மற் றும் எதிர்க்கட்சி வேட்பாளர் ஆகிய இருவருமே வாய்திறக்கவில்லை. தமிழ் மக்களிடம் பேசத் தேவை யில்லை என்றுஅவர்கள்சொல்கி றார்கள். எதிர்க்கட்சி வேட்பாளர் சமஷ்டி பற்றிய தீர்வையோ, ஜெனிவாவால்முன்வைக்கப்பட்டுள்ளமஹிந்தவுக்கு எதிரான நடவடிக் கையையோ ஏற்க மாட்டேன் என்கிறார்

இதிலிருந்து என்ன தெரிகிறது. எமது தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு தர முன்வரவில்லை – என்றார். (த-402)

### பொலிஸாருக்கும்

யாழ்பிராந்தியசிரேஷ்டபொலிஸ் அத்தியட்சகர் பிரிவுக்கு உட்பட்ட பொலிஸ்நிலையங்களின்பொலிஸ் உத்தியோகத்தர்கள் 30 பேருக்கு யாழ்.உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பிரசாத் ரணசிங்க மோட்டார் சைக்கிள்களை வழங்கி வைத்தார்.

காங்கேசன்துறைசிரேஷ்டபொலிஸ் அத்தியட்சகர் பிரிவுக்கு உட்பட்ட பொலிஸ் நிலையங்களின் பொலிஸ் உத்தியோகத்தர்கள் 32 பேருக்குத் தெல்லிப்பளை பொலிஸ் நிலைய வளாகத்தில் வைத்துகாங்கேசன்துறைசிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் ஜெயவர்த்தனமோட்டார் சைக்கிள்களை வழங்கினார்.

மாங்குளம் பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுக்குஉட்பட்ட 7 பொலிஸ் நிலையங்களைச் சேர்ந்த 30 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் வைத்து மாங்குளம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் றொசான் விஜயரத்ன வழங்கினார்.

மன்னார் மாவட்டத்தில் உள்ள தலைமன்னார்,மன்னார், விடத்தல் தீவு, இலுப்பைக்கடவை, மடு, முருங்கன், சிலாபத்துறை ஆகிய 7 பொலிஸ் நிலையங்களிலும் கடமையாற்றும் 31 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு மன்னார் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் வைத்து மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட்டன. மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சந்தன அழகக்கோன், உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஐ.ரி.சுகத பால ஆகியோர் மோட்டார் சைக்கில்களை வழங்கினர். (த-4-56-86-500)

### இலங்கைத்

வருகின்றது. இதில் முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சிறிலால் வீரசூரிய அவரது மனைவியுடன் பங்கேற்றுள்ளார்.

இவ்வாறானதொரு நிலையில், தென்னாபிரிக்கத் தமிழ்க் கூட்டமைப்பு, அவருக்கு எதிராகக் குற்றவியல் குற்றச்சாட்டைப் பதிவு செய்துள்ளது.

1990 ஆம் ஆண்டுகளில் இராணுவத் தளபதியாகப் பணியாற்றியபோது, மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டார் என்று அவருக்கு எதிராக, தென்னாபிரிக்காவில் உள்ள வெளிநாட்டுக் குற்றங்களுக்கான சிறப்புப் பிரிவின் ஆணையாளரிடம், முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. 'தமிழ் மக்களின் போராட்டத்தை எப்போதும் நாங்கள் ஆதரிக்கின்றோம். மனித குலத்துக்கு எதிரான குற்றங்களை இழைத்த ஜெனரல் சிறிலால் வீரசூரியவை உடனடியாகச் சர்வதேச சட்டங்களின் கீழ், கைது செய்து நீதியின் முன் நிறுத்த தென்னாபிரிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்று, ஆறு இலட்சம் இந்திய வம்சாவளியினரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தென்னாபிரிக்கத் தமிழ்க் கூட்டமைப்பு கோரியுள்ளது. (த-5)

### மைத்திரிக்கே

கட்சி உறுப்பினர்கள் முன்னிலையில் வாசித் தார்.

இந்த மாநாட்டில் பேசிய எதிர்க் கட்சித்தலைவர் ரணில் விக்கிரம சிங்க, ஐக்கிய தேசியக் கட்சி வர லாற்றில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினரொருவருக்கு ஜனாதிபதித் தேர்தலில் ஆதரவளிப்பது இதுவே முதன் முறை என்று தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் சிறிசேனவை ஆதரிக்கும் தமது நிலைப்பாட்டைதியாகம் எனத்தெரிவித்த ரணில் விக்கிரமசிங்க, பின்னர் நாடாளுமன்றத் தேர்தலினூடாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையிலான அரசை நிறுவுவதற்கு எதிர்பார்ப்பதாகக் குறிப்பிட்டார்.

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் நாம் நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவோம். நாடாளுமன்றத்தில் யார் இருக்க வேண்டும் என் பதை மக்கள் தீர்மானிப்பார்கள். ஆனால், ஆகக் குறைந்தது அடுத்து வரும் இருவருடங்களுக்கேனும் அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கிய அர சொன்றை அமைப்பது தொடர் பாகக் கவனம் செலுத்தப்படும் – என்று ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார்.

### காஸ்

தற்போது மீண்டும் 250 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது. இதேவேளை ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் நாளை இடம்பெறவுள் ளது. வேட்புமனுத் தாக்கலின் பின்னர், இவ்வாறான விலைக் குறைப்பு நடவடிக்கைகள் முன் னெடுக்கப்பட முடியாது. இன்று நள்ளிரவுக்குள் பொருள் விலை குறைப்புக்களுக்கான அறிவிப்புக்கள் வரலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (த-5)

### ஈழத்

என்ற கருத்தரங் கில், இலங்கை சென்று வந்த பா.ஜ.க. தேசிய பொதுச் செயலாளர் முரளிதர் ராவ் பங்கேற்கிறார். இந்திய மீனவர்கள் பிரச்சினையில் தீர்வை நோக்கி' என்ற தலைப் பில் நடை பெறும் கருந்தரங்கில் மத்திய அமைச்சர் பொன்.ராதா கிருஷ்ணன் பங்கேற்றவுள்ளார்.

கூட்டத்தில் எடுக்கப்படும் முடிவுகள் மத்திய அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டு, இலங்கைப் பிரச்சினை, மீனவர்கள் பிரச்சினையில் நிரந்தர தீர்வுகாண நடவடிக்கை எடுக்கப்படும், என்று தமிழக பா.ஜ.க தலைவர் தமிழிசை சௌந்தர ராஜன் தெரிவித்துள்ளார். (த-5)

### ஆளும் கட்சி

கள் அடிப்படையிலும் சிறு கூட்டங்களின் மூலம் பரப்புரை இடம்பெறவுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த மாவட்ட மட்டத்தில் 27 பிரதான தேர்தல் பரப்புரைக் கூட்டங்களில் பங்கேற்க உள்ளார் என்றும் அவர் குறிப்பிட்டார். (த-5)

# விளையாட்டு




## இந்தியாவுடன் மோத ரெடி



இந்தியாவுடன் மோதுவதற்கு ஆயத்தமாக ஆஸ்திரேலிய அணியினர் பயிற்சியில் ஈடுபட்டனர்.

இந்தியா, ஆஸ்திரேலிய அணிகள் மோதும் முதல் டெஸ்ட் போட்டி எதிர்வரும் 9 ஆம் திகதி அடிலெய்ட்டில் தொடங் குகிறது. இதற்கு ஆயத்த மாகும் வகையில் ஆஸ் திரேலிய அணியினர் பயிற்சியில் ஈடுபட்டனர்.

அப்போது, வேகப் பந்து வீச்சாளர்களான மிட்செல் ஜோன்சன், பீற்றர் சிடில், ஹேசல்வுட் போன்றோர் பவுன்சர்களாக வீசினர். இதனைச் சமாளிக்க முடியாமல் வார்னர், வொட்சன், கிறிஸ் ரோஜர்ஸ் திணறினர்.

மிட்செல் மார்ஷ் வீசிய பவுன்சரில் ஷேன் மார்ஷ் தடுமாறியதைக் காண முடிந்தது.(த)

## மரண அறிவித்தல்

### சிவஞானம் கிரிஷாந்



தாமோதரம்பிள்ளை வீதி, அரசடி, சங்கத்தானை, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், பாரிஸ் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட சிவஞானம் கிரிஷாந் 28.11.2014 அன்று அகால மரணமடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.12.2014) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் இல.58, ஸ்ரீ மனோன்மணி அம்மன் வீதி, அம்பாள் குளம், கிளிநொச்சியில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்துக்காக ஆனந்த நகர் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**58, ஸ்ரீமனோன்மணி அம்மன் வீதி, அம்பாள்குளம், கிளிநொச்சி.**

(51304) (10.6)

**தகவல்: குடும்பத்தினர்.**
**தொடர்புகளுக்கு: 077 8803928**

## சச்சின் சாதனையை தகர்க்க காத்திருக்கிறார் சங்கக்கார

சர்வதேச ஒருநாள் போட்டியில் அதிக அரைச்சதம் எடுத்த சச்சினின் சாதனையைச் சங்கக்கார நெருங்கிவிட்டார்.

இலங்கை அணியின் நட்சத்திர ஆட்டக்காரராக இருக்கும் சங்கக்கார, களமிறங்கிய அனைத்துப் போட்டிகளிலும் தன் அசத்தல் திறமையைக் காட்டி வருகிறார். பல சாதனைகளையும் குவித்து வருகிறார்.

இங்கிலாந்து அணிக்கு எதிரான 3ஆவது ஒருநாள் போட்டியில் 3 ஆயிரம் ஓட்டங்கள் என்ற மைல்கல்லை எட்டிய சங்கக்கார, அடுத்து இந்திய அணியின் முன்னாள் ஜாம்பவான் சச்சினின் அதிக அரைச் சதம் என்ற சாதனையை முறியடிக்கக் காத்திருக்கிறார்.

452 இன்னிங்ஸில் விளையாடியுள்ள சச்சின் 96 அரைச் சதங்கள் அடித்துள்ளார். ஆனால் 386 இன்னிங்ஸ் விளையாடியுள்ள சங்கக்காரஇப்போழுதே89 அரைச்சதங்களைக் கடந்து விட்டார்.

சச்சினின் சாதனையைமுறியடிக்கஇன்னும் 8 அரைச்சதங்கள் மட்டுமே உள்ளன. உலகக் கிண்ணப்போட்டிகளுக்கு முன்இலங்கைகுறைந்தது 15 போட்டிகளில் விளையாடும். இதனால் சச்சினின் சாதனை சங்கக்காரவால் முறியடிக்கப்படும் எனத் தெரிகிறது.

கலிஸ் (86), டிராவிட்(83),இன்சமாம் (83), பொண்டிங் (82),ஜெயவர்த்தன (76),கங்குலி(72), ஜெய சூரிய (68), முகமது யூசுப்(64) ஆகியோர் அடுத்தடுத்த இடங்களில் இருக்கின்றனர். (த)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சரஸ்வதி சந்திரசேகரம்

அனிஞ்சிலடி வீதி, துன்னாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி சந்திரசேகரம் நேற்று (06.12.2014) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சந்திரசேகரத்தின் (ஓய்வுபெற்ற எழுதுவினைஞர்) அன்பு மனைவியும், சந்திரயோகனின் (ஓய்வுபெற்ற செயலாளர், பிரதேச சபை பருத்தித்துறை) அன்புத் தாயும், விமலாதேவியின் (ஓய்வுபெற்ற செயலாளர் நகரசபை, வல்வெட்டித்துறை) அன்பு மாமியும், திருமதி ம. சந்திரிகா (பிரான்ஸ்), Dr. திருமதி கா. தர்ஷிகா (யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்பு அப்பம்மாவும், மனுதாஸ் (பிரான்ஸ்), Dr. காண்டீபன் (ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், மாதுரி, மதுஜன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு பூட்டியும், காலஞ்சென்ற இராசம்மா, வண்ண குலம் (கனடா), அற்புதமலர் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (06.12.2014) பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வேரோண்டை இந்து மயானத்தில் தகனம் செய்யப் பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவின்ர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C/18098) (10.6)

**தகவல்ம ச. சந்திரயோகன் (மகன்)**

## மரண அறிவித்தல்கள்

### இளையவி சின்னத்துரை (ரைக்டர் சின்னத்துரை)



வட்டு கிழக்கு, சித்தங்கேணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இளையவி சின்னத்துரை (ரைக்டர் சின்னத் துரை) நேற்று (06.12.2014) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையவி-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற முத்தம்மாவின் அன்புக் கணவரும், இந்திராணி, யோகேஸ்வரன், கமலாதேவி, கனகாம்பிகை, கணேசலிங்கம் (கனடா), அனந்தாதேவி, கனகராசா (ஜேர்மனி), சுந்தரலிங்கம், புஸ்பராணி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற இரத்தினம் மற்றும் மணிராசா, மகேந்திரம், நிர்மலாதேவி (கனடா), தவராசா, கமலேஸ்வரி (ஜேர்மனி), ஜெயராணி, சற்குணராசா ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.12.2014) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக நண்பகல் 12.00 மணியளவில் கரைச்சி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வட்டுகிழக்கு, சித்தன்கேணி.**
**021 321 3725**

(C/18100) (10.6)

**தகவல்: குடும்பத்தினர்.**

### திருமதி சொர்ணலட்சுமி சிவப்பிரகாசம்



புங்குடுதீவு, 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், அரசடி வீதியை வதிவிடமாக வும் கொண்ட திருமதி சொர்ணலட்சுமி சிவப் பிரகாசம் கடந்த (04.12.2014) வியாழக் கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (07.12.2014) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, இருபாலை கானான் சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**91/2, அரசடி வீதி, தஞ்சிலேன், யாழ்ப்பாணம்.**
**021 222 9131**

(54730) (10.6)

**தகவல்: குடும்பத்தினர்.**

### வைரமுத்து சரவணமுத்து

தோற்றம் 13 . 04 . 1936



மறைவு 05 . 12 . 2014

சிறுப்பிட்டி தெற்கைப் பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைர முத்து சரவண முத்து நேற்று முன்தினம் (2014.12.05) வெள்ளிக் கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரமுத்து- சிவகாமசுந்தரி தம்பதிய ரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராமநாதன் -சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம், சின்னப்பிள்ளை, குமாரசாமி, மாசிலாமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுப்பிரமணியம், யோகரத்தினம் ஆகியோரின் மைத்துனரும், தெய்வநாயகி, பத்மலோஜினி, தெய்வராணி, நல்ல நாதன், சிவநேசன், சோதிநாதன், கேதீஸ்வரி, கிருபாகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், விஜயராஜன், சிவகுருநாதன், முரளிதரன், உமா, கோசலா, சுஜிதா, தவராஜன், விஜிதா ஆகி யோரின் மாமனாரும், சஜந்தா, பாலசயந்தன், லசந்தனன், சிவறஞ்சித், நிவெஸ்திகா, நிருஸ்திகா, நிவேதன், சரண்யா, வாசன், வாகினி, விசாகன், சாரங்கன், கபிஷன், லதுஜன், டிலக்சி, கேசவன், பிரவீன் காலஞ்சென்ற வாசுகி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08/12/2014) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடை பெற்று மு.ப. 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரிகைக்காக காலயம்புலம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி.** (54721) **தகவல்: குடும்பத்தினர்.**

### சின்னப்பொடியன் கந்தையா (ஓய்வுபெற்ற நில அளவை உத்தியோகத்தர்)



கைதடி மத்தி குமரநகரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பொடியன் கந்தையா (ஓய்வுபெற்ற நில அளவை உத்தியோகத்தர்) கடந்த (04.12.2014) வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பொடியன்-வள்ளி தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா (செட்டி யார்) மாரிமுத்து மற்றும் விசாலாட்சி தம்பதியரின் மருமகனும், இராசலட்சுமியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற லட்சுமி, வெள்ளப்பிள்ளை, சின்னையா, பூபால சிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிறிஸ்கந்த ராஜா (சுவிஸ்), திருச்செல்வராஜா (நில அளவைக் கந்தோர்), அற்புதராணி, சிவனேசராசா (நோர்வே), விவேகானந்தராசா (லண்டன்), தயாளராசா (லண்டன்), கிருபராணி, செல்வராணி, சிவகணேசவேல், பிரான்ஸில் வசிக்கும் நவநீதராசா, யோகராணி ஆகியோரின் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.12.2014) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊற்றல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**குமரநகர், கைதடி மத்தி.**

(54727) (10.6)

**தகவல்: குடும்பத்தினர்.**

# பழி தீர்த்த நியூசிலாந்து தொடர் சமநிலையில்



## அலஸ்டயர் குக்குக்கு ஒரு நாள் போட்டித் தடை

இங்கிலாந்து அணித் தலைவர் அலஸ்டயர் குக்குக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளதுடன், ஒரு போட்டியில் விளையாடத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு எதிரான மூன்றாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து அணி 5 இலக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

அம்பாந்தோட்டை சூரியவெவ மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டி, மழையால் 35 பந்துப்பரிமாற்றமாக குறைக்கப்பட்டது. டக் வொர்த்–லீவிஸ் விதிப்படி இலங்கை அணி நிர்ணயித்த 236 ஓட்டங்கள் இலக்கை இங்கிலாந்து 33.4 ஓவர்களில் எட்டியது.

இந்த போட்டியில் இங்கிலாந்து இரு பந்துப்பரரிவமாற்றம் தாமதமாக பந்து வீசியது கண்டுபிடிக்கப்பட்டதால், இங்கிலாந்து அணித் தலைவர் அலஸ்டயர் குக்குக்கு போட்டி கட்டணத்தில் 20 சதவீதம் அபராதமாக விதிக்கப்பட்டது.

ஓராண்டுக்குள் இரண்டாவது முறையாக மெதுவான பந்து வீச்சு புகாரில் சிக்கியதால் ஒரு போட்டியில் விளையாடத் தடையும் அவருக்கு விதிக்கப்பட்டது.

இலங்கைக்கு எதிரான நான்காவது போட்டி எதிர்வரும் 7ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்தப் போட்டியில்இங்கிலாந்துஅணிக்கு இயன் மோர்கன் தலைமை தாங்குவார். (த)

பாகிஸ்தான் மற்றும் நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டாவது 20/20 போட்டி நேற்று முன்தினம் டுபாயில் ஆரம்பமானது.

பாகிஸ்தான் நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட 20/20 தொடரின் முதலாவது போட்டியில் பாகிஸ்தான் அணி வெற்றிபெற்றுள்ள நிலையில் தொடரை வெள்ளையடிப்புச் செய்ய வேண்டுமாயின் இந்தப் போட்டியிலும் வெற்றிபெற வேண்டும் என்ற நோக்கில் பாகிஸ்தானும் தொடரை சமநிலைப்படுத்த வேண்டுமாயின் கட்டாயம் இப் போட்டியில் வெற்றிபெற வேண்டும் என்ற நிலையில் நியூஸிலாந்தும் களமிறங்கின.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடுமாறு நியூஸிலாந்தை பணித்தது. இதன்படி ஆரம்ப வீரர்களாக களமிறங்கியவர்கள் அணிக்கு சிறந்த தொடக்கத்தை அமைத்துக் கொடுத்தனர். அணியின் ஓட்டம் 49 ஆக இருந்த பொழுது நியூஸிலாந்தின் முதல் இலக்காக டேவ்சிச் 21 ஓட்டங்களுடன் வெளியேறினார். மறுமுனையில் வில்லியம்சன் தனித்துநின்று போராடினாலும் அடுத்தடுத்து வந்த முன்னிலை வீரர்களான பிறவுண்நீல் 0, ரெய்லர் 7 என வெளியேற அணி ஏமாற்றம் கண்டது. இருப்பினும் மத்தியவரிசை வீரர்களான லாதம் 26, றோஞ்சி 31என ஓட்டங்களைக் குவிக்க அணி இருபது பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 144 ஓட்டங்களை பெற்றது. பந்து வீச்சில் பாகிஸ்தான் சார்பாக உமார்குல், அப்ரிடி ஆகியோர் தலா 2 இலக்குகளையும் ரன்வீர், றசா, ஹபீஸ் ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

145 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி எனும் இலகுவான இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணியின் முன்னிலை வீரர்களான அஹ்மட் 1, ஹபீஸ் 9, சொகைல் 3 என வெளியேறி ஏமாற்றம் கொடுக்க ஒரு கட்டத்தில் பாகிஸ்தான் அணி 24 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளை இழந்து தவித்தது. இருப்பினும் தொடர்ந்து வந்த மத்திய




வரிசை வீரர்களான செஷஜுட் 33, நசீம் 19, அப்ரிடி 28 என சற்று நிலைத்து நிற்க பாகிஸ்தான் அணி 104 ஓட்டங்களுக்கு 7 இலக்குகளை இழந்து சற்று போராட ஆரம்பித்தது. ஆனாலும் பின்வரிசை வீரர்களான அலி 2, ரன்வீர் 11, குல் 0 என வெளியேற பாகிஸ்தான்அணி 18.5 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 127 ஓட்டங்களைப் பெற்று 17 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

பந்துவீச்சில் நியூஸிலாந்து சார்பாக மில்ஸ், நீஸ்ஹம் ஆகியோர் தலா 3 இலக்குகளையும் டேவ்சிச் 2 இலக்குகளையும் ஹன்றி, விக்ரோறி ஆகியோர் தலா 1 இலக்கையும் கைப்பற்றினார்கள்.


போட்டியின் ஆட்டநாயகனாக டேவ்சிச்சும் மற்றும் தொடராட்ட நாயகனாக றோஞ்சியும் தெரிவானார்கள். இரண்டு போட்டிகளைக் கொண்ட தொடரில் இரு அணிகளும் தலா ஒவ்வொரு போட்டிகளில் வெற்றிபெற்றதால் தொடர் சமநிலையில் முடிந்தது. இரு அணிகளுக்குமான ஒருநாள் போட்டித்தொடர் நாளையதினம் ஆரம்பமாகிறது. (த–ரி)




## பந்து வீச்சு, களத்தடுப்பு மோசத்தால் தோல்வி

பந்துவீச்சு மற்றும் களத்தடுப்பு மோசமாக இருந்தது தான் 3ஆவது ஒரு நாள் போட்டியில் தோல்விக்கு காரணம் என்று இலங்கை அணித் தலைவர் மத்தியூஸ் கூறியுள்ளார்.

இங்கிலாந்து அணிக்கு எதிரான 7 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் இலங்கை அணி தொடர்ச்சியாக 2 வெற்றிகளை பெற்றது. 3 ஆவது ஒருநாள் போட்டியில் 5 இலக்குகள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது. இந்தத் தோல்வி பற்றி இலங்கை அணித் தலைவர் மத்தியூஸ் கூறுகையில், 35 பந்துப்பரிமாற்றங்களில் 235 ஓட்டங்கள் என்பது சிறந்த ஓட்டங்கள் தான். மைதானம் ஈரமாக இருந்தது. ஆனால் இதை கண்டிப்பாகக் காரணம் காட்ட முடியாது. நல்ல ஓட்டங்கள் இருந்தும் பந்துவீச்சு மற்றும் களத்தடுப்பு நன்றாக இல்லை. இது தான் தோல்விக்குக் காரணமாக அமைந்தது எனத் தெரிவித்துள்ளார். (த)




## தென்னாபிரிக்க அணி அறிவிப்பு

2015 ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிக்கான 30 பேர் கொண்ட உத்தேச தென்னாபிரிக்க அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், உலகக் கிண்ணப் போட்டியில் விளையாடவுள்ள இறுதி 15 வீரர்கள் கொண்ட அணி எதிர்வரும் ஜனவரி மாதம் அறிவிக்கப்படவுள்ளது.

அறிவிக்கப்பட்டுள்ள உத்தேச அணி வீரர்கள் விவரம் வருமாறு:–

ஏ.பி.டிவிலியர்ஸ் (அணித் தலைவர்), ஹஷிம் அம்லா (துணை அணித் தலைவர்), கைலி அப்பாட், பர்ஹான் பிஹார்டீன், குவிண்டன் டி கொக், மர்செண்ட் டீ லாங்கே, டுமினி, டு பிளேசிஸ், டீன் எல்கர், பியுரன் ஹெண்ட்ரிக்ஸ், ரீசா ஹெண்ட்ரிக்ஸ், இம்ரான் தாஹிர், ரோரி கிளீன்வெல்ட், ரியான் மெக்லாரன், டேவிட் மில்லர், மோர்னே மோர்கெல், கிறிஸ் மோரிஸ், ஜஸ்டின் ஆண்டாங், வெய்ன் பார்னெல், ரொபின் பீற்றர்சன், ஆரோம் பாங்கிசோ, வெர்னன் பிலாண்டர், ஆண்ட்ரூ புட்டிக், காஜிசோ ரபடா, ரைலி ரூசோ, மிதகோசி ஷேஸி, டேல் ஸ்டெய்ன், லொன்வாபோ சொட்சோபி, மோர்னி வான் விக், டேவிட் வீஸ். (த)

# விளம்பரங்கள்

## 6 நாள்களில் 20 பேருக்கு டெங்கு நோய்த் தாக்கம்

யாழ்ப்பாணம், டிசெ.07

யாழ்.மாவட்டத்தில் இந்த மாதம் முதல் 6 நாள்களில் சுமார் 20 பேருக்கும் மேற்பட்டோர் டெங்குத் தொற்றினால் பீடிக்கப்பட்டுள்ளனர் என்று வைத்திய சாலைத் தரப்பு தெரிவித்தது.

நேற்று மாத்திரம் 6 பேர் டெங்கினால் பீடிக்கப்பட்டுள்ளனர். நேற்றுமுன்தினம் 3 பேர் பீடிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டவர்களின் எண்ணிக்கை மாத்திரமே இது. கடந்த மாதம் யாழ்.மாவட்டத்தில் 316 பேர் டெங்கினால் பீடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-4)


இன்று முதல் மீண்டும் சிவப்பிரகாசம் வீதியில்

நத்தார் பண்டிகையை முன்னிட்டு
**மாபெரும்** சிறப்பு தள்ளுபடி
வீட்டு, அலுவலக தளபாடங்களை
மிகக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.



அலுமாரி (வீட்டுபாவனைக்குரியது) ~~14750/=~~ 8990/=
மரக்கட்டில் ~~8750/=~~ 6100/=
பிளாஸ்டிக் கதிரை ~~900/=~~ 625/=



Sofa ~~45500/=~~ 32900/=
மெத்தை ~~4115/=~~ 2320/=

15, சிவப்பிரகாசம் வீதி, (தட்டாதெரு சந்தி)
(C/17628)(10) 077 180 7672, 077 831 4201



## பணியாளர் தேவை

யாழ். நகரில் இயங்கும் முதல்தர ஹோட்டலுக்கு (Hotel) கீழ்க்காணும் பணியாளர்கள் தேவை.

1).வரவேற்பாளர்: ஆண்/பெண் (மும்மொழிகளும் தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது)
2).தோட்டப் பராமரிப்பாளர் : ஆண்கள் மட்டும்
3).சுத்திகரிப்பாளர் : ஆண்/பெண்
4).சாரதி
5).கணக்குப் பதிவாளர்

விண்ணப்பங்களைக் கீழ்க்காணும் முகவரிக்கு தொலைபேசி இலக்கத்தைக் குறிப்பிட்டு எதிர் வரும் 15/12/2014 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய முகவரி:
**விளம்பர இல 5034 மே/பா உதயன் பணிமனை**
**இல.361,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்**
குறிப்பு: உணவு, தங்குமிட வசதிகள் செய்து தரப்படும் (சி/18093)



## CHEMISTRY S.Vasu

புதிய பிரிவுகள் ஆரம்பம்

| | |
|---|---|
| Inorganic<br>Tue,Thus (6-7pm) | Physical<br>Sat, Sun (12-1pm) |
| organic<br>BI Tue,Thus (7-8pm)<br>BII Mon,Wed (6-7pm) | Thermo<br>Mon,Wed (5-6pm) |
| Paper Class | Sat, Sun (5-6.30pm) |

தொடர்புகளுக்கு: 077 996 1250, 077 469 6695
தூர வகுப்புகளுக்கு தொடர்புகொள்ள: 075 039 1482
NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்



## சிறுநீரகம் தேவை

சிறுநீரகம் செயலிழந்த 15 வயதுடைய சிறுவனுக்கு O Positive ($o^+$) சிறுநீரகம் உடனடியாகத் தேவை. தர விரும்புவோர் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

**தொடர்பு:** 077 614 1764
077 203 3251 (54709)



## வேலையாள்கள் தேவை

ஜேர்மன் ரெக் சற்றலைற் சென்ரர்ஸ்
இன் கட்டட பணிகள் செய்வதற்கு
கொந்துராத்துக்காரர்கள் தேவை.
கட்டடப் பணிகள் இடம்பெறும் இடங்கள்:
கைதடி, கிளிநொச்சி, முல்லைத்தீவு,
பூநகரி, மன்னார், வவுனியா, மாங்குளம்.
**விவரங்களுக்கு:**077 375 1803, 071 238 7076
**Sanken Construction (Pvt) Ltd**
(சி.17918) (45.3)



## ஐடியல் அக்கடமி

சீரணிச் சந்தி சண்டிலிப்பாய் — K.K.S வீதி, யாழ்ப்பாணம் (பாரதி பதிப்பகம் முன்பாக)

**பிரிவு II தரம் 6 முதல் O/L வரை கல்வியாண்டு - 2015**

**ஆரம்பம் : 08.12.2014 திங்கள் 8.30 am**

பெற்றோர்களே! மாணவர்களே!! இரு இடங்களிலும்

- புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு தரம் 6 இலிருந்து O/L வரை இலவசம்.
- புலமைப் பரிசில் பரீட்சை சித்தியடையாதவர்களுக்கு மார்கழி, தை மாதங்கள் மட்டும் இலவசம்.
- இச்சலுகைகள் யாவும் மார்கழி மாதம் இணையும் மாணவர்களுக்கு மட்டும்.

(54666) நிர்வாகி







இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.12.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.